# பூந்துணர்

நறவம் - 01



வெளியீடு:
பூநகரி பிரதேச செயலக கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம்,
பூநகரி.
2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூந்துணர்

நறவம் - 01



வெளியீடு:

பூநகரி பிரதேச செயலகம் கலாசாரப்பேரவை,

பிரதேச செயலகம்,

பூநகரி.

2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சஞ்சிகையின் பெயர் | : | பூந்துணர் |
| அட்டைப்படம் | : | ஓவியர் திரு. பிரபாகர் |
| பதிப்புரிமை | : | பூநகரி பிரதேசக் கலாசாரப் பேரவை. |
| | | பிரதேச செயலகம், பூநகரி. |
| முதலாவது பதிப்பு | : | செப்ரெம்பர் 2011 |
| பிரதிகள் | : | 1000 |
| பக்கங்கள் | : | 80 |
| வெளியீடு | : | பூநகரி பிரதேச கலாசாரப்பேரவை |
| | | பிரதேச செயலகம், பூநகரி. |
| அச்சுப்பதிப்பு | : | கரிகணன் பிறிண்டேர்ஸ். |
| | | 424, கே.கே. எஸ். றோட், |
| | | யாழ்ப்பாணம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே.......


| | | |
|---|---|---|
| 1. | மலர்க்குழு | ை |
| 2. | வாழ்த்துச் செய்தி | எ—எைை |
| 3. | இதழாசிரியர்களின் உள்ளத்திலிருந்து... | ைஓ—ஒ |
| 4. | புது வசந்தம் | 01–02 |
| 5. | புத்திர பாசம் | 03–11 |
| 6. | தூவானம் | 12–19 |
| 7. | இணையமும் எழுத்தாளர்களும். | 20–25 |
| 8. | "பூப்பூச்சடங்கும் பூநகரியும்" | 26–29 |
| 9. | வழிபாட்டின் வழிப்படுத்தல் | 32–39 |
| 10. | பூநகரின் பூந்துணரே வாழி ! | 40 |
| 11. | "பூந்துணர்" சுடர்விட்டுப் பிரகாசிக்கும் | 41 |
| 12. | வருத்தங்களுக்கேற்ற சில கை வைத்தியங்கள் | 42–43 |
| 13. | ஒரு ஆட்டின் கதறல்... | 44–47 |
| 14. | பூநகரி ..... குறு நகர் வலம் | 48–49 |
| 15. | விடுகதைகள் | 50–51 |
| 16. | பூநகரி; செட்டிய குறிச்சியும், திகிரி விநாயகரும் – வரலாறு | 52–61 |
| 17. | சொத்தாகும் முதுமை | 62–65 |
| 18. | ஞானிமடத்தின் தோற்றம் | 66–69 |
| 18. | உங்களுடன் ஒரு நிமிடம்... | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

தலைமை ஆசிரியர் : திரு. சு. வசந்தகுமார்,
பிரதேச செயலரும், கலாசாரப்
பேரவையின் தலைவரும்,
பிரதேச செயலகம், பூநகரி.

இதழாசிரியர்கள் : திரு. பொன். தில்லைநாதன்
திரு. கு. குகேந்திரன்

இதழ் நிர்வாக உறுப்பினர்கள்: திருமதி ற. நரேந்திரா
திருமதி வனிதா
திரு. ஜெகநாதன்
திரு. யோகராசா
திரு. கனகராசா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருவாட்டி
றூபவதி கேதீஸ்வரன் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

**பண்பாட்டுப் பதிவாகச் சிறக்கட்டும்**

கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க பூநகரி பிரதேசத்தின் கலை கலாச்சார வடிவங்களை மீளவும் ஆவணப்படுத்தும் ஒரு முயற்சியாக பூநகரி பிரதேச செயலகம் வெளியிட்டு வைக்கும் கலாச்சார மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இற்றைக்கு இரண்டாயிரம் வருடத்திற்கு முன்னர் மக்கள் இப்பகுதியில் வாழ்ந்ததற்கான தொன்மை வரலாற்று ஆவணங்கள் மண்ணித்தலைப் பகுதியிற் பெறப்பட்ட பிராமிச்சாசனங்கள் மூலம் நிறுவப்பட்டுள்ளன. அதனை விட அல்லிராணிக்கோட்டைப் பகுதியும் இப்பிரதேசத்தின் தொன்மையை சுட்டிக்காட்டுகிறது.

எமது மாவட்டத்தின் முதுபெரும் புராணக் கிராமங்கள் காணப்படும் பூநகரிப் பிரதேசத்தின் பேச்சு வழக்கும் சமூக நடைமுறையும் தனித்துவமானவை. வன்னி இராச்சியத்தில் குறுநில மன்னர்களின் ஆட்சிப்பிரதேசமாக இருந்து வளர்ந்து வரும் இப்பிரதேசத்தின் தனித்துவமான கலையம்சங்களையும், பண்பாட்டு நடைமுறைகளையும் சமூக வழக்காறுகளையும் காலத்தின் தேவைகருதி மீளவும் பதிவு செய்வதற்கு இம்மலர் உதவும் என நம்புகின்றேன். கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட பல்வேறு சிற்றேடுகளும், நூல்களும் கடந்த போர்க்காலத்தின்போது முற்றாக அழிவடைந் திருக்கும் நிலையில் பூநகரி பிரதேச செயலகம் மேற் கொண்டிருக்கின்ற இவ்வாறான ஒரு முயற்சி பாராட்டுக்குரியது.

இதில் ஈடுபட்டுள்ள பிரதேச செயலாளர், பிரதேச கலாச்சார அலுவலர் மற்றும் பிரதேச கலைஞர்கள் அனைவரையும் உளமாரப் பாராட்டுகின்றேன். இப்பிரதேச பண்பாட்டுப் பதிவாக இக் கலாச்சார மலர் சிறப்புறட்டும்.

**திருமதி. றூ. கேதீஸ்வரன்,**
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பூநகரி கலாச்சாரப் பேரவையும், பூநகரி பிரதேச செயலகமும் இணைந்து வெளியிடவுள்ள "பூந்துணர்" என்ற அரையாண்டுச் சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். பூநகரி வரலாற்றுப் பெருமைமிக்க ஈழத்தமிழரின் ஆரம்பத் தாயகம். இந்த மண்ணின் வரலாற்றுப்பெருமையை வார்த்தையால் வடிக்க முடியாது. யாழ்ப்பாண நகரம் தோன்ற முன்பே பூநகரியில் எமது மூத்த தமிழ்க்குடி மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதனை பல வரலாற்றுச் சான்றுகளுடன் வரலாற்று ஆசிரியர்கள் பலர் எடுத்துக்கூறியுள்ளனர்.

இருந்தும் எமது வரலாற்றினையும், வரலாற்று ஆவணங்களையும் பேணிப்பாதுகாக்கும் பண்பாடு எம்மவர் மத்தியில் இல்லாத காரணத்தால் எமது வரலாறு தொடர்பாக கேள்வியெழுப்பபடுகின்றது.

இந்நிலையில் "பூந்துணர்" என்ற சஞ்சிகை எமது பூநகரியின் வரலாறுப் பண்பாடு, பாரம்பரிய கலை, கலாச்சார மரபுகளைப் பேணும் வகையில் வெளிவருவது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

"பூந்துணர்" பூநகரி மண்ணின் வரலாறு பண்பாடு பாரம்பரியம் அனைத்தையும் வெளிக்கொணரும் ஒரு கலங்கரை விளக்காக விளங்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

இச்சஞ்சிகையை வெளியிட முன்னின்று உழைத்த பூநகரி பிரதேச செயலாளர் திரு எஸ்.வசந்தகுமார் அவர்களுக்கும், ஆசிரியர் குழாமுக்கும் எனது நன்றிகளும், பாராட்டுகளும் உரித்தாகட்டும்.

**தி. இராசநாயகம்**
*பிரதிப்பிரதம செயலாளர்,*
*மாகாண பொது நிர்வாகச் செயலகம்-வட மாகாணம்,*
*பிராந்திய ஆணையாளர்- கிளிநொச்சி,யாழ்ப்பாணம்.*
*முன்னாள் அரச அதிபர்- கிளிநொச்சி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படும் பண்பாட்டுப் பேணுகைசார் சஞ்சிகை வெளியீட்டுடன் கூடிய கலாசாரவிழா நடைபெறுவதையிட்டுப் பெருமை யடைகின்றேன்.

"பூந்துணர்" என்ற பெயரைத்தாங்கி வெளிவரும் இச்சஞ்சிகை முதலில் அரையாண்டுச் சஞ்சிகையாக வெளிவருகின்றது. எதிர்காலத்தில் அது காலாண்டுச் சஞ்சிகையாக, அல்லது அதற்கு மேலாக வளரப் படைப்பாளர் களிடமிருந்து சிறந்த ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

பூநகரி பிரதேசத்தின் கலை, இலக்கிய, பண்பாட்டு கலாசார அம்சங்கள் மக்களின் வாழ்வியற் கோலங்கள், பூநகரிக்கே உரித்தான தனித்துவங்கள் வெளி உலகிற்குக் கொண்டுவரும் ஒரு சாதனமாகவும், இலைமறைகாய்போல் இருக்கும் இப்பகுதிப் படைப்பாளர்களின் ஆக்கத்திறன்களை வெளிக்கொணர ஒரு வாய்ப்பாகவும் இச்சஞ்சிகை பயன்படும் என்ற நோக்கில் பூநகரி பிரதேச கலாசாரப்பேரவை "பூந்துணர்" சஞ்சிகையினை வெளியீடு செய்து வைக்கின்றது.

**"வாசகர்களே! பூந்துணருக்குள் புகுந்துணருங்கள்"** மேலும் இச்சஞ்சிகை வெற்றிநடைபோட இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

**வாழ்க வாழ்க வாழ்க**

**திரு. க.சு. வசந்தகுமார்,**
உதவி அரசாங்க அதிபரும், கலாசாரப் பேரவையின் தலைவரும்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பண்பாடு, நம்பிக்கை, கலை, கலாசாரம், பழமொழி இன்னும் பலவும் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் வெவ்வேறானவை. இவையே அவ்வப் பிரதேசத்தை அடையாளப்படுத்தி நிற்கும் முத்திரைகள். உயரிய தொழில்நுட்பம் சமூகத்தில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தினும் மேற்போந்த அம்சங்கள் மட்டும் மாற்றம் பெறுவதில்லை. ஏனெனில் தனக்கென்ற தனித்துவத்தை, அடையாளத்தை, வீரியத்தை எந்த ஒரு சமூகமும் மாற்றிக்கொள்ள விரும்புவதில்லை. உணர்வோடு, உயிரோடு உறவோடு கலந்துவிட்ட கலை, கலாசார விழுமியங்கள் சமூகத்தை இறுகக் கட்டிநிற்கிறது. பல பல தலைமுறை கடந்தும் இந்த உணர்வுகள் நின்று நிலைக்கும். பூநகரிப் பிரதேசத்தின் அடையாளப்பெறுமானங்களை எழுத்துருவாக்கி அவற்றை அச்சு வாகனம் ஏற்றி " பூந்துணர்" என்ற பெயரிற் சஞ்சிகை வடிவில் ஆவணப்படுத்தும் முயற்சி பாராட்டத்தக்கது.

பூநகரி என்ற பூவுக்கு வாசனை ஊட்டும் மகரந்தங்களாக வெளிவரும் அப்பிரதேசம் சார்ந்த பல்வேறு விடயங்கள் நிச்சயம் அப்பிரதேசத்து மண்வாசனையை பிரஞ்ஞை பூர்வமாக வெளிப்படுத்தும் என நான் நம்புகின்றேன். அத்தோடு அப்பிரதேசம் சார்ந்த கலை, இலக்கிய ஆர்வலர்களது படைப்பாற்றலை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்கு இச்சஞ்சிகை களம் அமைத்துக் கொண்டிருப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இன்று இலக்கியப் படைப்புக்கள், சஞ்சிகைகள் அருகி வருவது கண்கூடு. இந்த இடைவெளி மாற்றப்பட வேண்டும். கல்விச்சமூகம் படைப்பாளிகளுக்கு ஊக்கம் தர வேண்டும்.

வன்னிமாவட்டத்தின் பூநகரிப்பிரதேசம்சார் பல்வேறு வளங்களையும் வெளிக்கொணரும் இப்பூந்துணர் சஞ்சிகைமூலம் மேலும், மேலும் வாசனையுடன் மலரட்டும் என்று வாழ்த்துகிறேன். இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரதேச செயலர், உத்தியோகத்தர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

**திருமதி என். ஸ்ரீதேவி,**
**பணிப்பாளர்,**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**
**வடமாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் உள்ளத்திலிருந்து...

பூநகர் கலாசாரப் பேரவையின் கன்னி முயற்சியாக முதல் வெளியீடாக "பூந்துணர்" என்னும் அரையாண்டுச் சஞ்சிகையை எம் தமிழ் உறவுகளின் கரங்களில் மலர்ந்து விரிந்து மணம் பரப்ப விட்டிருக்கிறோம். இச்சஞ்சிகையானது ஒருசில மாதங்களுக்குமுன் பிரதேச செயலாளர் பணிமனையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட எம் கலாசாரப் பேரவை ஒரு சில மாதங்களில் இச்சஞ்சிகையைப் பல நெருக்கடிகள் மத்தியிலும் வெளியிட்டுவைத்து ஒரு மாபெரும் கலை இலக்கிய விழாவைக் கொண்டாடுவது பெருமைவாய்ந்த ஒரு நிகழ்வென்றால் அது மிகையாகாது. எமது பிரதேச செயலர், பிரதேச கலாச்சார உத்தியோகத்தர்களின் அயராத முயற்சியோடு பேரவையின் உறுப்பினர்களின் ஆலோசனையோடு பூநகரில் இலைமறை காயாய் இருக்கும் படைப்பாளிகளை வெளிக்கொணரும் முயற்சியில் நாம் பெரு வெற்றியடையாவிட்டாலும் முடிந்தளவு கிடைத்த ஆக்கங்களை உள்ளடக்கி சிறந்த ஒரு சஞ்சிகையாக மலர்வது நம் பூநகருக்குப் பெருமை சேர்க்கும் ஒரு சிறந்த நிகழ்வாகும். அடுத்து மலர இருக்கும் எம் சஞ்சிகையில் எம்ஊரின் படைப்பாளிகள், பள்ளி மாணவர்கள் ஆக்கங்கள் நிறைந்து மலரும் என்பது எமது நம்பிக்கை.

எதிர்காலத்தில் இம்மலரை அலங்கரிக்கவிருக்கும் உங்கள் படைப்புக்கள் எங்கள் மண்ணின் வாசனைவீசித் திக்கெட்டும் நறுமணம் பரப்பிப் புலம்பெயர் நம் உறவுகள் கரங்களிலும் தவழும் தேன் துளிகளாக வெளி வரவேண்டுமென்றால் படைப்பாளிகள், விமர்சகர்களாகிய உங்கள் உள்ளங்களில்த் தங்கியுள்ளது. எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களே! சிறந்த நீதிபதிகள் உங்கள் உள்ளங்களில் தோன்றும் நல்ல சிந்தனைகளை, கருத்துக்களை நாமும் அறியச் சந்தர்ப்பம் அளிப்பீர். தொடர்ந்து மலர இருக்கும் தேன்துளி 2 சிறப்புடன் மலர நீங்களும் உங்கள் பங்களிப்பை நல்கிய பெருமையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நாம் இம்மலருக்கான ஆக்கங்களைப் பள்ளி மாணவர்களிடம் கூடுதலாக எதிர்பார்த்திருந்தும் போதிய ஒத்துழைப்புக் கிடைக்காமை எமக்குப் பெரும் மனக்குறையே. எதிர்காலத்தில் உங்கள் படைப்புக்கள் எம் "பூந்துணர்" மலரினை அலங்கரிக்குமென்று நாம் நம்புகின்றோம்.

இம்மலருக்கான ஆக்கங்களைத் தந்துதவிய பெரியார்கள், படைப் பாளிகள் அனைவருக்கும் எமது கலாசாரப்பேரவை சார்பாக நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றோம்.

**பொன். தில்லைநாதன்**
**கு. குகேந்திரன்**
**இணை ஆசிரியர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் கோவில்த் திருவிழாவில்
ஊரே கூடி வடம் பிடிக்கிறது.
இராக்காலக் கேளிக்கைகள்
இன்னிசை கானங்கள்
ஆணென்ன, பெண்ணென்ன
ஆவலுடன் கூட்டம் முண்டியடிக்கிறது.

வீதியோரம் விளம்பரப் படங்கள்
தெருவெல்லாம் வியாபாரிகள்
வகை வகையாய்ப் புடைவைகள்
வண்ண வண்ண பிளாஸ்ரிக்குகள்
மூண்டு வேண்ணா ஓண்டு ப்றி
ஐந்து வேண்ணா ரெண்டு ப்றி
வியாபாரக் கூச்சல்கள் ஓங்கி ஒலிக்கிறது.

# புது வசந்தம்

தென்னிலங்கைப் பயணிகளும்
வெளிநாட்டு உறவுகளும்
தாராளமாய் வருகிறார்கள்
நகரம் நெரிசலாய் நிரம்பி வழிகிறது
விதம் விதமாய் வாகனங்கள்
விற்பனையிற் சூடு பிடிக்கிறது.
டிஸ்கவறியாம், பல்சராம்
ஹங்காம் ஹரிஸ்மாவாம்
விதம் விதமாய் மோட்டார் சைக்கிள்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றைக் கிழித்துப் பறக்கிறது.
வீதியெல்லாம் வாலிபர் கூட்டம்
அரட்டை அடித்து மகிழ்கிறது.

எண்ணற்ற தொ(ல்)லை பேசிகட்கு
வீடு வீடாய்ப் பிரச்சாரம்
கையடக்கத் தொலைபேசிகளும்
கைக்குள்ளே உலகத்தை
இன்ரநெற்றாய்க் கொடுத்தபடி
பள்ளிப் பிள்ளைகளும்
பகலிரவாய் கான்ட் போனில்
அறிவை வளர்த்தபடி

தங்குமிடங்கள் தாராளமாய்
நிறுவனங்கள் ஏராளமாய்
வீட்டு வாடகையோ
ஆயிரம் ஆயிரமாய்
வருமானம் சூடுபிடிக்கிறது.
வைப்பிலிட வங்கிகள்
தினமொன்றாய் முளைக்கிறது.

ஓ... போர் ஓய்ந்துவிட்டது
வளங்கள் கொளிக்கிறது.
பொருளாதாரம் சிறக்கிறது
தமிழினம் சந்தோஷமாய்
சல்லாபித்து மகிழ்கிறது.
வெளியுலகம் பார்க்கிறது.
விந்தை மனிதரைப் புகழ்கிறது.

ரேணு சக்தி
முழங்காவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# புத்திர பாசம்



பூநகரிப் பிரதேசத்தில் பழம்பெரும் கிராமம் அது. சரித்திரப் பிரசித்தி பெற்ற பல தொன்மையான எச்சங்கள் புதைந்து கிடக்கும் உயர்ந்த மண் குன்றுகள் நிறைந்த அழகு பொலிந்த அக்கிராமம் பனை, தென்னை வளங்களுடன், கடல்வளமும் நிறைந்து இன்று பல சுற்றுலாப் பயணிகளின் கண்ணுக்கு விருந்தளிக்கும், சிற்றூர்தான் கௌதாரிமுனை. அக்கிராமத்தின் தொன்மை வரலாற்றை எடுத்தியம்பும் சோழர் காலத்துச் சிவன் ஆலயமும் இடிபாடுடன் இன்றும் காட்சியளிக்கும். அவ்வூரிற் பரம்பரை பரம்பரையாக உடையார் வேலையைச் செய்து ஓய்வுபெற்ற முருகேசு உடையார் என்றால்த் தெரியாத எவரும் அப்பிரதேசத்தில் இல்லை யெனலாம்.

பேரோடும், புகழோடும் வாழ்ந்து வந்த முருகேசு உடையார் வீட்டில் அந்தச் சோகச் சம்பவம் நடைபெற்று இன்று ஆறாவது நாள். நேற்று ஐந்தாவது நாள்தான் எட்டுச்செலவு என்று சொல்லப்படுகின்ற இறந்த ஆத்மாவுக்காகச் செய்யப்படும் கிரியைகள் தடல்புடலாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் செலவுடன் நடைபெற்று முடிந்தது. உடையாரின் மனைவி செல்லம்மாவின் படத்தின் முன்னே பலதரப்பட்ட உணவுவகைகள், பழவகைகள், இறைச்சி, மீன், பலகாரங்கள், குடி வகைகள் எனப் படைத்துப் பொழுது கருகும் செக்கல் நேரத்தில் பலர், பந்தம் ஒருகையில் ஏந்தி படைத்த பண்டங்களை எடுத்துச்சென்று கிரியைகள் நடைபெற்ற இடத்திற் படைத்து மீண்டனர்.

எடுபிடிகளாய் வேலையில் ஈடுபட்ட பலருக்கு உடையாரின் உபயமும் கிடைத்தது. அவர்கள் எதுவித கவலையும் அற்றவர்களாக வயிறு புடைக்கக் குடித்துக் கும்மாளம் போட்டுப் பல்சுவைமிக்க எஞ்சிய உணவுகளையும் வயிற்றிற் போட்டு உண்டகளை கொண்டவர்களாக முன் முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த தகரப் பந்தலுள் குறட்டை விட்டபடி புரண்டு, புரண்டு உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

நேரம் நடுச்சாமமாகிவிட்டதென்பதை உலகுக்குப் பறைசாற்ற சாமக்கோழிகள் பலதடவை கூவி ஓய்ந்தது. இந்த அகாலநேரம். முருகேசு உடையாரின் உள்ளம் அமைதியின்றி சார்மனைக்கட்டிலில் கிடந்தவண்ணம் அங்குமிங்கும் புரண்டவண்ணம் அமைதி இழந்த நிலையில் தவித்துக்கொண்டிருந்தார். அவரின் உள்ளக் குமுறலை யாரும் பகிர்ந்துகொள்ளவோ...... ஆறுதல் கூறவோ இல்லாத நிலைமைதான் அங்கு இருந்தது. "நான் தவறு செய்திட்டன்"

"என்னால் வந்தவினைதான் எல்லாம்" அவரது வாய் மீண்டும் மீண்டும் முணுமுணுத்து ஓய்கிறது. அருகே இருந்த சுங்கானை எடுத்தார். கொட்டப் பெட்டியில் இருந்த புகையிலையை எடுத்துச் சுங்கானில் அடைக்கிறார். தீப்பெட்டியைத் தட்டிப் பற்றவைத்து புகையை இழுத்து இழுத்து வெளியே தள்ளுகிறார். இன்று ஆறாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் இதுவரையும் ஐந்துநாள்களாக உறவினர்கள்... அயலவர்கள் என்று தங்கியிருந்தவர்கள் மெல்ல ..... மெல்ல உடையார் வீட்டில் இருந்து பயணம் சொல்லித் தங்கள் இருப்பிடம் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். உடையார் வீட்டில் நீண்ட நாட்களாகப் பணிவிடை செய்துவரும் சங்கரனும் பண்ணை மாடுகளை மேய்த்துப் பட்டியில் அடைக்கும் வேலனும்தான் தஞ்சம். அடிக்கடி வரும் உடையாரின் தங்கை முறையான சரசுதான் துணை. அடிக்கடி வந்து போவாள். ஆசைப்பண்டங்கள் செய்யும்போது அப்பண்டங்கள் உடையார் வாயிலும் சுவை ஊட்டும்.

"அவளாவது எனது பாசத்திலை அதை..... இதைச் செய்து தாறாள். வேறை ஆர் என்னைக் கவனிக்கப்போகினம். எல்லாம்நான் தேடின வினை" இப்படியே சொல்லிச், சொல்லி மனம் வெதும்பிக் கண்ணீர் சிந்திய நிலையில் அவர் கண்ணில் இருந்து வழிந்தோடும் கண்ணீர் அவரது கதையைக் கூறி ஆறாய்ப்பாய்ந்து கொண்டிருக்கிறது.

வளம்மிக்க அக்கிராமத்தில் நான்காவது தலைமுறையாக உடையார் வேலையைச் செய்துவரச் சேவையில் இருந்து இளைப்பாறி ஓய்வூதியம் பெற்றுச் சிறப்புடன் பெரும் செல்வந்தராக, உடையார் பரம்பரை முதிசங்களாகப் பெருந்தென்னந்தோப்புக்கள், பனந் தோப்புக்கள், நெற்காணிகள், மாட்டுப்பட்டி, எருமைப்பட்டி என்பனவும் இவற்றைக் கவனிக்க, பராமரிக்க எடுபிடி ஆட்கள் எல்லாம் ஒருங்கே கொண்ட உடையாருக்கு மூன்று ஆண் பிள்ளைகளும் இருந்தனர். தனத தந்தை தமக்கு எப்படிக் கல்வி போதித்து உயர வைத்ததுபோல் தான் மூன்று பிள்ளைகளையும் கிராமத்தில் பெற்ற ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து யாழ். நகரில் பிரபலமான கல்லூரியில் தமது உயர் வகுப்புக் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருந்த காலகட்டம் அது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை விடுமுறைக்காலம் என்றால் யாழ். நகரப் பாடசாலை ஒன்றின் பள்ளி நண்பர்கள், ஒத்தார் குழுக்கள் முருகேசு உடையாரின் வீட்டிற்கு வருவதும், அவ்வூரின் எழில் கொஞ்சும் அழகைக் கண்டு களிப்பதும், விருந்தோம்பும் பண்பில் உயர்ந்து நிற்கும் உடையார் மனைவி செல்லம்மாவின் அறுசுவை உணவுகளையும், அவ்வூரின் பனம்பண்டங்களை உண்பதுக்குமெனப் போட்டி போடுவதும் அவர்களுக்குப் பெரும் மனமகிழ்வாக உபசரணை செய்வதும் தங்கள் பிள்ளைகளைப்போலவே வரவேற்பதும் உபசரிப்பதும் அம்மாணவர்களுக்கு உடையார் குடும்பத்தின்மீது மிகுந்த பற்றையும் இறுக்கமான பிணைப்பையும் ஏற்படுத்தியிருந்தது.

பாடசாலை விடுமுறை காலத்தின்போது அவர்களின் குக்கிராமத்தை நோக்கிப் படையெடுக்கும் நகர்ப்புறமானவர்களுக்கு வழங்கி உபசரிப்பதற்காகப் பனையோலைகளால் இழைக்கப்பட்ட உமல்களில் புழுக்கொடியல், தோட்டுப்புழுக்கொடியல், பாணிப்பனாட்டு என பனம் பண்டங்களைச் சேர்த்துப் பாதுகாப்பாக வைத்து வழங்கி மகிழும் செல்லம்மாவின் பண்பு அவர்களது பரம்பரையாக வந்த சிறப்பியல்பாகும்.

பூநகரி மொட்டக்கறுப்பன் அரிசிப்பிட்டும், பச்சைப்பெருமாள் அரிசிச்சோறும், ஒடியற் கூழின் சுவையையும் நன்கு ருசித்த நண்பர்கள் கூட்டம் இக்கிராமத்துக்குவர நான் முந்தி நீமுந்தி என நிற்பதும் அவர்களைச் சமாதானப்படுத்தி அடுத்தவிடுமுறைக்கு நீங்கள் எனச் சொல்லிச் சமாளிப்பதிலும் அவர்களுக்குப் பெரும் சங்கடமும் ஏற்பட்டுவிடும்.

அடுத்த வருடம் ஏப்பிரல்மாத விடுமுறைக்குப் பூநகரிக்கு வந்து அவ்வூர் வனப்பைக் கண்டு இரசிக்கச் சுவையான தம்மூரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்காத உணவுகளை உண்ணப் பெரும் ஆசைகொண்டவர்களாக உடையாரின் பிள்ளைகளின் ஒப்புதலையும் பெற்றுக்கொண்ட மாணவர்கள் நாட்களை எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

அன்று ஒருநாள் பல இடங்களில் துப்பாக்கிவேட்டுச் சத்தங்களால் நகர்ப்புறம் அதிர்ந்த பல இடங்களில் பாதைத் தடைகள். பஸ்களில் சோதனை வீதிகளில் ரயர்கள் போட்டு எரிப்பு இப்படியே பல சம்பவங்கள் இனவிடுதலைக்கென முனைப்புப்பெற்று வளர்ந்து வந்த இரு குழுக்களிடையே பெரும் மோதல் பல இடங்களில் தமிழ் இளைஞர்கள் போட்டிக் குழுக்களால் வேட்டையாடப்பட்ட நிலை... பல கொலைகள்.... மக்கள் செய்வதறியாது போராளிக் குழுக்களை வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தனர். "ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு வேட்டைதானே" தமிழர் தலை விதியை எண்ணி யெண்ணித் தலையைப் போட்டு உடைத்தார்கள் தமிழ் புத்தி ஜீவிகள். தமிழர் தலைநகர் தடம் புரண்டது. நகர் வெறிச்சோடியது.

யாழ். நகரின் பதட்டநிலை அறிந்த உடையாரும் மனைவியும் கடலுக்கப்பால் துறையை நோக்கியபடி தம்பிள்ளைகள் நிலை தெரியாத திகைப்பில் ஆழ்ந்தார்கள். நேராத கோயில் எல்லாம் நேர்த்தி வைத்தார்கள். செல்லித்தீவு அம்மனுக்கு திகிரி விநாயகருக்கு, சோபாலபிட்டி சித்திவிநாயகருக்கென வெள்ளைச் சீலைத்துணி எடுத்து மஞ்சள் தண்ணிபூசி சில்லறை முடிந்து வேப்பம் பத்திரிகையோடு தலைவாசல் நிலையில் கட்டி மண்டாடிக் கொண்டிருந்தனர். யாழ். நிலையை அடுத்து சங்குப்பிட்டி கேரதீவுப் படகுச்சேவையும் நிறுத்தப்பட்டு படையினரின் காவல் முடுக்கி விடப்பட்டதை அறிந்து ஒருநிலையில்லாமல் தவித்தார்கள் உடையாரும் மனைவியும்

"ஐயா நீங்கள் காலாகாலம் தெய்வங்களுக்கு ஒருகுறையும் விடேல்லை பங்குனிவிழாவும் சிறப்பாகத்தானே செய்தனீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லி அம்மன் உங்கடை பிள்ளைகளுக்கு ஒரு கஸ்டமும் வரவிடா கவலைப்படாதையுங்கோ" சங்கரனும், வேலனும் ஆறுதல்கூறிக் கொண்டேயிருந்தார்கள். அன்று அவர்கள் வீட்டில் அடுப்புக்கூட பற்றவைக்காத நிலையில்....

அன்றைய நாள் யாழ். நகரமே அதிர்ந்துகொண்டிருந்தது. பல இடங்களின் சந்திகளில் தீமூட்டப்பட்டு எரிந்துகொண்டிருப்பதாகவும் சில இடங்களில் மோதல்களில் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்கள் களின் உடலங்கள் தமிழிளைஞர்களினால் எரிக்கப்படுவதாகவும் பாடசாலை விடுதிக்குவந்த பாடசாலைக் காவலர்கள்மூலம் செய்தி அறிந்த மூன்று சகோதரர்களும் எப்படியும் வீட்டிற்கு போய்ச் சேரவேண்டும். "அம்மா எந்த நிலையில் இருப்பாளோ தெரியாது" பெரும் பீதியுடன் நள்ளிரவு நேரத்தில் பாடாசலை விடுதியின் பின்புற மதிலாற் குதித்துக் கண்டிவீதி வழியே நாவற்குழியை நோக்கி நடக்கத் தொடங்கினர். சந்தியை அண்மிக்கும்போது சந்தியில் பெருஞ் சுவாலைவிட்டு எரிந்த தீ மெல்ல மெல்ல அணைந்துகொண்டிருந்தது. அந்த வெந்தணலில் இரு உடலங்கள் எரிந்து கருகிய நிலையிற் கண்ட சின்னவன் செந்தில் அண்ணன் சரவணனைக் கட்டிப்பிடித்த படி அழத்தொடங்கினான். அவனுக்குத் துணிவையூட்டிக் கண்டி வீதியில் இருந்து பிரியும் கேரதீவு வீதியில் நடக்கத் தொடங்கினார். யாருடைய கண்ணிலும் படாமல் கேரதீவுக் கரையை அடைந்துவிட்டால் வள்ள ஓட்டம் இல்லாவிடினும் மீன்பிடி வளங்களிலாவது சங்குப்பிட்டித் துறைக்குப்போய் விட்டால் வீடுபோய்ச் சேர்ந்ததுக்குச் சரி என்று சொல்லிக்கொண்டு வேகமாக நடந்துகொண்டிருந்தனர். பசிக்களை, நீண்டதூரம் நடந்த அலுப்பு பெரும் சிரமத்துடன் தனங்கிளப்பு, மறவன்புலோ, அறுகுவெளி என அச்சிற்றூர்களின் பரந்து விரிந்து பச்சைப் பசேலெனக் காட்சியளித்த அவ்வயல் வெளியினூடாக நீண்டு செல்லும் அவ்வீதியில் நடந்துகொண்டிருந்தனர். மாரிகால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைக்கும் கடற்காற்றும் அவர்கள் உடலில் மோதித் துன்பத்தை ஏற்படுத்தும் நிலையில் நம் ஊரைச் சென்று அடைந்துவிட வேண்டுமென்ற ஒரே நோக்கில் வயல்வெளிகளைத் தாண்டி கடல் நடுவே ஊடறுத்துச் செல்லும் பாதையிலே நடந்துகொண்டிருக்கும் அவர்களுக்குக் கேரதீவுத்துறை நன்குத் தெரிந்தது. வேகமாகப் பொங்கி மேலெழுந்து அடிக்கும் அலைகள் அவர்கள்மீது உப்புநீரை வாரி இறைக்கிறது. அலையோடு துள்ளி வீதியில் விழும் மீன்வகைகள் துடிதுடித்து மீண்டும் கடலுக்குள் போய்விழும் காட்சியை நின்று இரசிக்க முடியாதவாறு விரைந்துசென்று அடிவானில் கிழக்கு வெளிக்கும் நேரம் கேரதீவுத் துறையை அடைந்தனர்.

கலகலப்புடன் எந்நேரமும் விளங்கும் கேரதீவுத்துறை வெறிச்சோடிக் கிடந்தது. துறையின் அலுவலகமும் பூட்டப்பட்டு "வள்ள ஓட்டம் நிறுத்தப்பட்டுள்ளது" என்ற விளம்பரப்பலகை காணப்பட்டது. சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்த சரவணன் தன் தம்பியருடன் அங்கே கட்டப்பட்டிருந்த ஒரு தோணியின் கட்டுக்களை விலக்கித் தன் தம்பியர் இருவருடன் சங்குப்பிட்டித் துறைக்கு இடையில் உள்ள கடல் வெளியைத் தாண்டிக் கரையை வந்தடைந்தான்.

அங்கு அவர்கள் முற்றிலும் எதிர்பார்க்காத நிலைமை மரண பயத்தை ஏற்படுத்த அல்லோலப்பட்டனர். தோணியைக் கரையை அணைக்க முற்பட்டவேளை வானத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப் பட்டது. "கான்ஸ் அப்" கட்டளையோடு பல படைவீரர்கள் அருகே ஓடிவந்தனர். மூவரையும் இறக்கி விசாரணை செய்து துருவித் துருவிக் கேள்விகள் கேட்டனர். ஆங்கில மொழியிற் பேசக்கூடிய சரவணன் அவர்களுக்குத் தங்கள் நிலையை விளக்கவே பொறுப்பதிகாரி ஏற்கனவே முருகேசு உடையாரின் நெருக்கமானவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பிள்ளைகள் என்று அறிந்தவுடன் அவர்களுக்குச் சூடான கோப்பி கொடுத்து உபசரித்துத் தனது ஜீப் வாகனத்தில் அவர்களுடைய கிராமத்துக்கு அனுப்பி வைக்கும்படி பணித்தான்.

மூன்றாவது நாளாகப் பெருங்குழப்பத்தில் இருந்த உடையார் வீட்டில் பிள்ளைகளின் வருகை பெருமகிழ்ச்சியைத் தந்தது. உடையாரின் பிள்ளைகள் வந்து சேர்ந்துவிட்டார்கள் என்ற செய்தி கிராமமெங்கும் பரவியது. மக்கள் நகரப் புதினமறிய நிறைய வந்துபோய்க்கொண்டிருந்தனர். பிள்ளைகள்பட்ட அவலங்கள், நகரில் போராளிக் குழுக்களின் போட்டி நிலையால் பெரும் கலக்கமடைந்தார் உடையார். விடுதலைப் போராட்டமெனக் கிராமங்கள்தோறும் கருத்தரங்குகள்... ஆட்சேர்ப்புகள் கட்டாயப்படுத்தல்கள். இராணுவ ரோந்துகள்... சிந்தித்த உடையாரும் மனைவியும் ஒரு முடிவுக்கு வந்தனர். தம்பிள்ளைகளை இங்கு வைத்திருப்பது பாதுகாப்பில்லை என்ற முடிவுக்கு வந்தனர். தங்களுக்குத் துணையாக இளையவன் செந்திலை வைத்துக்கொண்டு சரவணனையும், தம்பியையும் மேற்குலக நாட்டுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டனர்.

தாய் தந்தையைப்பிரிய மனம் இடம்கொடாத நிலையில் அவர்கள் வற்புறுத்தலால் பயணத்தை மேற்கொண்டு கனடா நகரில் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர். தமது அறிவாற்றலாற் சில மாதங்களில் அந்நாட்டின் குடியுரிமையையும் பெற்றுக்கொண்டனர்.

புலம்பெயர்ந்த நிலையில் அந்நாட்டுக் குடியுரிமையோடு வாழ்ந்த சரவணனுக்குத் தன் பிறந்த நாட்டு நிலைமைகள் பெரும் வேதனையைக் கொடுத்தது.

போராட்டம் பெரு வளர்ச்சி அடைந்து ஆங்காங்கே சுற்றி வளைப்புக்களும் மோதல்களும் நடைபெற்ற காலகட்டம் அது. பல மேலைத்தேய நாடுகளின் ஆதரவுடன் மோதல் நிறுத்தம் ஏற்பட்டு சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையாரின் மூத்தவன் சரவணண் தன் தாய் தந்தையரைப் பார்க்கப் பிறந்த ஊருக்கு வந்தான். உடையார் வீட்டிற் குதூகலம் சரசுவின் மகள் அவனது உறவுமுறை மச்சாளுக்கும், சரவணனுக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. சில நாட்கள் குதூகலமாகக் கழிந்து சரவணன் மனைவியுடன் புறப்பட ஆயத்தமானான்.

"தம்பி சின்னவனை இஞ்சை வைச்சிருக்கிறது நல்லதாய்த் தெரியேல்ல அவனையும் கூட்டிக்கொண்டுபோ" உடையார் கூறிய வார்த்தைக்குப் பதில் சொல்லாமல் ஊமையாய் நின்றான் சரவணன் " தம்பி யோசிக்காதை நான் முடிவெடுத்திட்டன்" உடையாரின் ஒரே குரல் தான் செய்யும் பெருந்தவறை உணராமற் பேசினார். த்ன் தம்பி, மனைவியுடன், சரவணன் சென்று வருடங்கள் பல கடந்தது.

முருகேசு உடையார் தன் அன்புத் துணைவியின் பிரிவால் துரும்பாய் இளைத்தார். கலகலப்பாக விளங்கிய வீட்டில் இப்போ யாரும் இல்லை மூன்று ஆண்பிள்ளைகளைப் பெற்ற செல்லம்மாவுக்கு கொள்ளிவைக்க ஒரு பிள்ளை இல்லை" எண்ணியெண்ணி பெருமூச்சுவிட்டவண்ணம் பாயோடு ஒட்டும் நிலை படுத்த படுக்கையானார். சரசு மட்டும் அடிக்கடி தொலைபேசிச் செய்திகளை அனுப்பிக்கொண்டே இருந்தாள். தன் பிள்ளைகள் வருவார்கள் என்ற நம்பிக்கையில் அன்னம் தண்ணி இன்றிப் புரண்டார். உடையாருக்கு வருத்தம் கடுமையாம். சனங்கள் வாறதும், போறதுமாக இருந்தார்கள் மக்கள் வருவார்களா ? ஊரவர்களின் கேள்வி. உடையாரின் கண்கள் நிலை குத்தி நிற்கிறது. அப்பாவுக்கு ஏதும் பிரச்சினை எண்டால் நாங்கள் வரமுடியாமல் இருக்கும் இரண்டு இலட்சம் மாமியின் பெயருக்கு அனுப்பியிருக்கு சரவணனின் செய்தி " தாய்க்கு வராத பிள்ளைகள் தகப்பனுக்கு வரப்போகினமே" கூடி இருந்தவர் கதை உடையார் காதிலும்... அருகே இருந்தவர் தேவாரம் பாடுகிறார். அழுகுரல் ஒலிக்கிறது.

முற்றும்.

**பூநகர்**
**பொன். தில்லைநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# தூவானம்

அன்று விடுமுறைநாள் ஆதலால் நான் வீட்டிலிருந்தேன். கொஞ்சம் டல்லாக இருந்தது. திடீரென வயலைப் போய்ப் பார்த்தால் என்ன ? என்ற எண்ணம் தோன்றியதும் "அம்மா நான் வயலுக்குப் போய்வருகிறேன்." எனக் கூறிக்கொண்டே வீதியில் இறங்கினேன். "இந்த கொழுத்துற வெயிலுக்குள்ள ஏன் பிள்ள இப்ப" அம்மா புலம்புவது கேட்டது. "இதோ கொஞ்ச நேரத்தில வந்திடுவேன்" என்று கூறிக்கொண்டே சந்தோஷமாக வயலை நோக்கிப் புறப்பட்டேன். அம்மா சொன்னது உண்மைதான் என்று வெளியில் சிறிது நடந்ததும் தான் எனக்குப் புலப்படத் தொடங்கியது.

"இந்தக் கதிரவன் யார்மீது கோபம் கொண்டு விட்டான்? தன் வெப்பக் கரங்களால் இப்படித் தேடுகிறானே? ஓ... அவனை ஏமாற்றியவர்கள் பூமியில் தான் ஒளிந்துள்ளார்கள் என்று மூலை முடுக்கெங்கும் புகுந்து தேடுகிறானோ?" என் கவிதையுள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபடமற்ற சிந்தனை வளர்த்தது. அந்த வெயிலிலும் வயலில் அறுவடை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. அரிவு வெட்டிக்கொண்டிருந்த கார்த்திகா வியர்வைத் துளிகளை கைபோன போக்கில் துடைத்துக் கொண்டிருந்தாள். வழமைபோல என்னையறியாமலேயே என் கண்கள் அவளை ஆராய்ச்சி செய்தன. எதையோ பறிகொடுத்த தோற்றம் துயரத்தின் சாயல் அப்பட்டமாய்ப் பிரதிபலிக்கும் விழிகள்; வளமாய் வாழ்ந்து சடுதியாய்க் கிடைத்த துன்பத்தின் சுமையைத் தாங்கியதுபோல் மேனி, எல்லாமே அவளை ஒரு தரம் திரும்பிப் பார்க்க வைத்தது.

அவளை நான் பல தடவைகள் பார்த்திருக்கின்றேன். எத்தனையோ இழப்புக்களைச் சந்தித்து மீண்டும் வந்தவர்களுடன் தோள்தட்டி, கைகொடுத்து, உள்ளம் பகிர்ந்து உறவாடும் எனக்கு இவளது உள்ளத்தினுள் பாரிய சுமை அழுத்துவதை உணர முடிந்தது. கார்த்திகா இன்னும் அந்தத் துயரச் சூழலுக்குள் அமிழ்ந்துகொண்டிருந்தாளே தவிர மீளவில்லை என்பதை எனது ஒவ்வொரு பார்வைகளும் உணர்த்திக் கொண்டே இருந்தது. இன்று இவளுடன் எப்படியாவது கதைக்க வேண்டும் என நினைத்துக்கொண்டேன். அங்கு ஆறு பெண்கள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். ஆடிப்பாடி வேலை செய்தால் களைப்பிருக்காது என்பதை மெய்ப்பிப் பதைப்போல அவர்கள் தமது கதைகளைப் பேசி, சிரித்து இயங்கிக் கொண்டிருந்தார்கள். கார்த்திகா இதில் எதுவும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. கைவேலை செய்தாலும் மனம் எங்கோ போய் விட்டதோ ? என்ற எண்ணம் என்னுள் எழுந்து மறைந்தது.

"என்னம்மா பானு, இன்று வேலைக்குப் போகலியா ? ஏன் இந்த வெயிலுக்குள்ள வந்தனியள்" என அங்கிருந்த கமலம் அக்கா கேட்டார். " இல்ல அக்கா. சற்று வயலைப் பார்த்துவிட்டுப் போகலாமே என்று வந்தனான். நீங்களெல்லாம் நிக்கிறீங்கதானே! என்னை மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வெயில் பொசிக்கிடுமா என்ன" என்றேன், சிரித்துக்கொண்டே. " இந்த வெயிலுக்கு மட்டும் பொசுக்கக்கூடிய சக்தி இருந்தா எவ்வளவு நல்லா இருந்திருக்கும்" இவ்வளவு நேரமும் அமைதியாய் இருந்த கார்த்திகா கூறிக்கொண்டாள். அப்படிக்கூறும்போது அவளது உதடுகளில் ஒரு கைத்த முறுவல் ஒன்று தோன்றி மறைந்ததைக் கவனித்தேன்.

இந்தத் துன்பங்களை அனுபவிக்காமல் தன்னைப் பொசுக்கிவிடும் என்று நினைத்துச் சொன்னாளோ இல்லை; தன்னை இந்த நிலைக்காக்கிய எல்லோரையும் பொசுக்கிவிடும் என்று நினைத்துச் சொன்னாளோ தெரியவில்லை. ஆனால் அவளது முகபாவனை எதையோ ஆழமாய் வெறுப்பதைக் காட்டிற்று. நான் ஓரிரு தடவைகள் அவளுடன் கதைத்திருக்கிறேன். எனவே துணிச்சலாக "நானும் அப்படித்தான் கார்த்தியக்கா பல தடவைகள் நினைச்சுப் பார்த்தனான். இங்கே உள்ள தீய குணங்கள் எல்லாத்தையும் இந்த சூரிய வெப்பம் அழிக்குமாக இருந்தால் எவ்வளவு நல்லா இருக்கும்" என்றேன். அவள் என்னைப் பார்த்து சினேகமாய் முறுவலித்தாள்." உங்களுக்கே இப்படித் தோணியிருக்கே, சாவோட போராடித் திரும்பவும் இந்தச் சாக்கடை சமூகத்திற்கா வந்திருக்கிறேன் என ஒவ்வொருநாளும் நினைச்சு நினைச்சு அழும் எனக்கு எப்படி இருக்கும் சொல்லுங்க" என்றாள். அவளுக்கு என்ன பதில் சொல்வதென்று ஒரு கணம் தடுமாறிப்போனேன். அன்பாய் அவளைப் பார்த்து ஆமோதிப்பதாய்த் தலையை அசைத்தேன். வம்புபேசும் பெண்கள் கூட்டம் அப்பால் நகர்ந்துவிட என்னுடன் நின்று பேசிய கார்த்திகாவை மரநிழலில் அமரச் சொன்னேன்.

"என்ன பானு, வேலைக்கு வந்திட்டு உட்கார்ந்து கதைக்கிறதா ?" எனத் தயங்கினாள். "பறவால்ல. கொஞ்சநேரம் இருங்க" என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைமனதாய் அமர்ந்தாள். "என்ன புள்ள கார்த்திகா, வேலையை விட்டிட்டு உட்கார்ந்திட்டாய்? வந்து சுறுக்கா வெட்டுபுள்ள" எனக் கமலமக்கா கூப்பிட்டார். எழப் போனவளை அமர்த்திவிட்டு "அவவுக்கு தலையை சுற்றுறமாதிரி இருக்காம். கொஞ்சநேரம் இருந்திட்டு வரட்டுமன் நீங்க வெட்டுங்கோவன்" என்றேன்.

"இவையளோடையெல்லாம் இந்தப் புள்ள ஏன் கதைக்குது. வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்ததுகள். கொடுத்தா மடத்தைப் பிடிச்சிடுங்கள் கண்டியளோ. இந்தப் புள்ள பானுவிட்ட சொல்லனும். இதுகள அளவோட வைச்சிருக்கச் சொல்லி" அவர்கள் மெதுவாகப் பேசுவதாக நினைத்துச் சொன்னார்களோ? இல்லை கேட்கட்டும் என்றே கதைத்தார்களோ தெரியவில்லை. ஆனால் அவர்களது உரையாடல் எனது செவிகளில் துல்லியமாய் விழுந்தது. நான் அதிர்ந்துபோனேன். கார்த்திகாவும் அதைக் கேட்டிருக்க வேண்டும். அவளது முகத்தில் அப்படியொரு துயரம் அப்பிக் கொண்டிருந்தது. நான், பொன் வைக்கும் இடத்தில் பூ வைப்பதுபோல மெதுவாக அவளது கையைத் தொட்டேன். வார்த்தைகளால் ஆறுதல் சொல்ல என்னால் முடியவில்லை.

அவள் தன்னைச் சமநிலைப்படுத்திக்கொள்ளச் சிறிதுநேரம் விட்டு விட்டு மெதுவாகக் கார்த்திகா என்றழைத்தேன். அவள் நிமிர்ந்தாள். "பாருங்க கார்த்திகா, எவ்வளவோ துன்பங்களைப் பார்த்திருக்கீங்க, அனுபவிச் சிருக்கீங்க, மீண்டும் வந்திருக்கீங்க, அப்பவெல்லாம் இவர்களா உங்களுக்குத் தோள் கொடுத்தார்கள்? யோசியுங்க கார்த்திகா" என்றேன்.

அவளது கண்கள் தாரை தரையாய்க் கண்ணீர் சொரிந்தன. "பானு, நான் உங்ககிட்ட சொல்லணும். நான்பட்ட துன்பம், இப்ப படுற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனை, என்னை கொஞ்சம் கொஞ்சமா கொல்லுற சமூகம், எல்லாம் சொல்லணும்" கூறிவிட்டு முகத்தை மூடி அழுதாள்.

"சொல்லுங்க கார்த்தி, ஆனா, இங்க வேணாம். வாங்க எங்க வீட்டுக்கு போவம்" என அவளை அழைத்துப்போனேன். சிவந்த விழிகளுடன் கார்த்திகாவும் நானும் வருவதனைக் கண்ட அம்மா புன்முறுவலுடன் விலத்திக்கொண்டார். மகளை அவ்வளவு தூரம் புரிந்து வைத்திருந்தார் அவர். இவ்வுலகில் பெற்ற தாயைவிடப் புரிந்துகொள்ளக் கூடிய உறவுகள் வேறுண்டா? என நினைத்துப் பெருமைப்பட்டேன்.

நான் எனது அறையிற் கார்த்திகாவை அமர வைத்துவிட்டு " இப்ப சொல்லுங்க கார்த்திகா; கத்திச் சொல்லுங்க; என்னை நல்ல தோழியா நினைச்சு சொல்லுங்க; உங்களுக்குள்ளேயே வைச்சு மறுகிற விசயத்தை மனம் விட்டு சொல்லுங்க" என்றேன்.

"என்னால விம்மி முடியல. எதுவுமே முடியல. அழக்கூட முடியல" என்றவள் விம்மி அழுதாள். "வீட்டில அழுதா அம்மா யோசிப்பாங்க என்று அழுறதில்ல. வெளியில எனக்கு யாரும் இல்ல" என கத்தி அழுதாள். நான் மெதுவாக முதுகில் தட்டினேன். "பானு, நான் 2004ஆம் ஆண்டு O/L படிச்சுக்கொட்டிருக்கேக்க அப்பாவுக்கு கிளிநொச்சிக்கு வேலை மாற்றம் வந்திச்சு அம்மாவும் நானும் அண்ணாவும் அப்பாவோட போய் வசிக்கத் தொடங்கினோம். சந்தோஷமாய் இருந்திச்சு எங்கட வீடு. காலங்கள் கடக்க விதியா? சதியா? அண்ணா காணாமல் போனான் அத்தோட எங்கட சந்தோஷம் போயிடுச்சு. அவன் விரும்பி போனானா? விரும்பாம போனானா? எதுவென்றாலும் கேட்பதற்கு மீண்டும் அண்ணாவ நாங்க பார்க்கவே இல்ல. அவன் இந்த பூமியிலேயே இல்லை என்று யாரோ சொன்னார்கள். அம்மா அன்றிலிருந்து நோயாளியாய் போனா. அவள் சொல்லிக்கொண்டிருந்தாள். கண்கள் சொரிந்துகொண்டி ருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகப் போக நிலமை மோசமாகியது. எல்லோருக்கும் அது தெரியும்தானே. 2009 இல் எங்கும் மரண ஓலம். நாங்கள் பட்டினி, பயம், நோய் எல்லாவற்றையும் தாங்கி உயிர் காக்க ஓடிக்கொண்டிருந்தோம். அப்பதான் அது நடந்திச்சு. அப்பா எங்களை விட்டிட்டு போயிட்டார். அம்மா கடுமையா காயப்பட்டா" சொல்லிவிட்டு கத்தி அழுதாள். . அடிபட்ட புறாவாய்த் துடித்தவளைக் காண என் உள்ளம் வேதனையிற் சுருங்கியது. நான் எதுவுமே கதைக்கவில்லை.

அவளே தொடர்ந்தாள். "அம்மாவை வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்ச்சினம். நான் தடுப்பு முகாமுக்குக் கொண்டு செல்லப் பட்டேன். உறவுகள் யாரும் இல்லாம அம்மாவுக்கு என்ன ஆச்சுதோ என்ற வேதனையோட நான் அங்கு செத்துக் கொண்டிருந்தேன். என்ர சோகம் அவர்களைத் தாக்கியதோ? இல்லாட்டி நான் குற்றம் செய்யாதவள், என்றுணர்ந்தோ அம்மாவுக்காக என்னை விட்டு விட்டார்கள். நானும் அம்மாவும் எங்கட சொந்த இடமான சாவகச்சேரியில் மீளக் குடியேறினோம். எவ்வளவோ வேதனைகளை யும் தாங்கிக்கொண்டு எங்கட இடத்தில என்ர பிறன்ஸ் இருக்கினம்; அம்மாவோட கதைக்க பாசமான அயல் உறவுகள் இருக்கு என்ற ஆறுதலோடதான் நாங்க இங்க வந்தனாங்க." என்று சொல்லி முடிக்கும் முன்பே அவள் விழிகள் கண்ணீர் பெருக்கின. குரலெடுத்து அழுதாள். அழுது ஓய்ந்ததுமே நான் தண்ணீர்ச் செம்பை அருகில் வைத்தேன். சொல்லாமலேயே குடித்தாள். அந்தளவு அவள் தொண்டை வரண்டுபோயிருந்தது.

"ஆறுதல்தேடி வந்த எங்களுக்கு ஆறுதல் சொல்லாட்டியும் பறவாயில்ல. குத்திக்குதறிக்கொண்டிருக்கினம். அத என்னால தாங்க முடியல. ஒவ்வொருநாளும் யாராவது வீட்டுக்கு வருவினம். வாங்க அக்கா என்று வாயார வரவேற்றால் " உனக்கு தடுப்பு முகாமில என்ன நடந்திச்சு கொடுமை செய்தார்களா? பொம்பிளப்பிள்ளையள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூப்பிட்ட உடன போகணுமாம்" கேள்வி கேட்டே என்னை கொல்லுறாங்கள். "இல்ல அப்படி ஒன்றும் அங்க நடக்கல" என்று சொன்னா. அங்கால போய் "இவள் சரியான சதிர்காரி. பாவங்கள் என்று போய் கதைச்சா பெரிய வேஷம் போடுதுகள். வன்னியில் இருந்து வந்ததுகளே இப்படித்தான்" காது படவே கதைக்கினம். என்னால இதைத்தாங்க முடியல பானு, என்ர பிறன்சைக்கூட என்னட்ட வர விடுகினமில்ல. நான் என்ன பாவம் செய்தனான் பானு ? என்னுடைய சோகங்கள், வேதனைகள் எல்லாமே அவர்களுக்கு பொழுதுபோக்காக வேண்டுமென்று ஆசைப்படுகினம் பானு. என்னால முடியல பானு", அவள் அழுதாள் நான் விக்கித்துப் போயிருந்தேன்.

"ஓ சமூகமே
சகோதரத்துக்கே சாபக்கேட்டை
சளைக்காமல் விதைக்கிறாயே
நீ எப்போது திருந்துவாய்
இத்தனை இன்னல்களுமா
உன் சாக்கடை உள்ளத்தைச்
சரிப்படுத்தவில்லை!"

நான் மனதினுள் விரக்கியாய் கவி வடித்துக் கொண்டிருந்தேன். அழுது முடித்து தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்ட கார்த்திகா "என்ன பானு, ஆச்சரியமா இருக்கா ? என்றாள். "இல்ல கார்த்தி கவலையா இருக்கு. வேண்டாத விமர்சனங்களுக்கு நாங்கள் காயப்பட்டா விமர்சனம் தொடரும். ஆகவே நிமிர்ந்து நடந்தமெண்டு வைச்சுக்கங்க, தானே அது ஓஞ்சுபோயிடும். எல்லாமே அப்படித்தான் கார்த்தி" என்றேன். அவள் தலையை ஆட்டினாள். "நீங்க நிமிர்ந்து நில்லுங்க கார்த்தி. வேதனைகள் தாங்க முடியாமப்போனா அழுதிடுங்க. நல்லா கத்தி அழுங்க. வீட்ட அழ முடியல என்டா, என்னிடம் நீங்க எப்பவும் வரலாம்." என்றேன். "தாங்ஸ் பானு. எவ்வளவோ ஆறுதலா இருக்கு." என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்தி நீங்க படிச்சிருக்கிறீங்க. நல்ல உதவி செய்யிற பக்குவமான மனப்பாங்கு இருக்கு. உங்களையும் வளர்க்கலாம். சமூகத்திற்கும் உதவலாம். சனி, ஞாயிறு பிறியா ஒரு உளவளத்துணை வகுப்பு நடக்குது. அதில உங்கள சேர்த்துவிடுறன் போறீங்களா அதைப் படிச்சீங்க என்றால் உங்களப்போல உள்ள பல கார்த்திகாக்களுக்கு நீங்க உதவுற பாக்கியம் உங்களுக்குக் கிடைக்கும்" என்றேன்.

அவள் முகம் பிரகாசமானது. "எப்ப பானு போகணும், நான் தயார் என்று சந்தோஷமாகச் சொன்னாள். "வர்ர கிழமை போவம்" என்றேன். "ரொம்ப நன்றி பானு. மூழ்கிறவனுக்கு கிடைச்ச மிதப்பு கட்டையின்ர மகிமை அவனுக்கு மட்டும்தான் தெரியும் பானு. எனக்கு நீங்க செய்த உதவி உங்களுக்குக்கூட பெரிசா தெரியாது. எனக்கு வாழ்வுப் பிச்சை என்றவள் சிரித்துக்கொண்டே "அம்மா தேடுவா நான் போயிட்டு வாறன் என்று கூறிச் சென்றவளின் நடையில் ஒரு நிமிர்வு தெரிந்தது. இனி இவள் எழுந்து விடுவாள். வேண்டாத விமர்சனங்கள் இவளை வதைக்கப் போவதில்லை. "பானு சாப்பிட வா" அம்மா அழைப்பது கேட்டது. நான் திருப்தியுடன் சாப்பிடச் சென்றேன்.

**ரேணுகா சக்திதாஸ்**
பிரதேச செயலகம்,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையமும் எழுத்தாளர்களும்.




இன்று எல்லோராலும் உச்சரிக்கப்படுகின்ற இணையத் தொழில் நுட்பமானது இராணுவத் தேவைகளிற்காக அமெரிக்காவால் உருவாக்கப்பட்டதொன்றாகும். இக்கண்டுபிடிப்பானது தகவல் தொழில் நுட்பத்துறையில் மட்டுமல்லாது தனிப்பட்ட மனிதவாழ்வி லும் பல்வேறு படிமுறை மாற்றங்களை உண்டுபண்ணியுள்ளது. இணையத் தொழில் நுட்பத்தின் அசுரவளர்ச்சி எல்லா துறைகளிலும் இதன் தேவையினை இன்றியமையாததாக்கிவிட்டது. "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற முதுமொழி மாறி "இணைய இணைப்பில்லா வீட்டிற் குடியிருக்க வேண்டாம்" என்கிற அளவிற்கு இணையத்தின் தேவை மனிதவாழ்வியலுடன் பின்னி பிணைந்துவிட்டது. இவ்வாறாகப் பரிணாம வளர்ச்சி கண்ட இணையத்தொழில்நுட்பம் எழுத்தியல் துறையின் மரபுசார் பண்புகளைச் சிதறடித்துப் புதிய முறைகளை புகுத்தியுள்ளது என்றால் மிகையாகாது.

பாடசாலைகளில் கல்விகற்கும் காலங்களில் மாணவர்கள் எண்ணிலடங்கா கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் என எழுதுகிறார்கள் சிலமாணவர்கள் இதற்காகப் பரிசில்கள் கூட பெறுகிறார்கள். இவற்றிற்கு மேலாகப் பல்கலைக்கழக மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடத் தமது உயர்கல்விக்காக பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளை எழுது கிறார்கள். ஆனாலும், இவர்கள் எல்லோரும் தொடர்ந்தும் எழுத்தியல் துறைக்கு பங்களிப்பு செய்கிறார்களா என்பது ஐயத்திற் கிடமானது. இதற்கு இரண்டுகாரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒன்று தொடர்ந்து எழுதுவதில் அக்கறையின்மை மற்றையது எழுதும் எழுத்துக்களிற்கு அங்கீகாரம் இன்மை. இரண்டாவது காரணத்தின் அடிப்படையிலேதான் எழுத்துத் துறையில் ஆர்வம் உள்ளவர்கள் பலர் இத்துறையினைவிட்டு ஒதுங்குகின்றனர். கடந்த காலங்களில் இவ்வாறான ஒரு போக்கே காணப்பட்டது. ஆனாலும் இணையத் தொழில்நுட்பத்தின் துரிதவளர்ச்சியும் அதனோடிணைந்த இணையத்தளங்களின் வளர்ச்சியும் அனைத்து எழுத்தாளர்களிற்கும் களம் அமைத்து கொடுக்கின்றது என்பதில் ஐயமில்லை.

இற்றைக்கு ஒரு தசாப்தத்திற்கு முன்பு இணையத்தளங்களை வடிவமைப்பது; அவற்றினைப் பராமரிப்பது பெரிய நிறுவனங்களால் மட்டுமே சாத்தியமாக இருந்ததுடன் இவற்றிற்கான செலவுகளும் அதிகமாகவே காணப்பட்டன. தனிமனிதர்களிற்கான இணையத் தளமானது (Home page) எட்டாக்கனியாகவே இருந்தது. ஆனாலும் தொடர்ச்சியான தகவல் தொழில்நுட்பத் துறையின் முன்னேற்றங் களால் இத்துறைகளின் செலவுகளில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டன. இதனைத் தொடர்ந்து சில நூறு ரூபாய்களுடன் தனிநபர்கள் கூட தமக்கென இணையத்தளங்களை வடிவமைக்கலாம் என்ற நிலை தற்போது காணப்படுவதுடன் இதற்கான விசேட தொழில்நுட்ப அறிவுகூட அவசியமில்லை என்ற நிலை தற்போது உருவாகியுள்ளது. இணையத் தொழில்நுட்பத்தின் ஆரம்பகாலங்களில் இணையத்தின் மொழி ஆங்கிலம் என்றபோக்கே காணப்பட்டது. ஆனால் இன்று எல்லோருக்கும் இணையம் என்ற கருத்தும், தகவல்த் தொழில் நுட்பத்தின் இமாலய வளர்ச்சியும் உலகின் அனைத்து மொழிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையத்தளத்தில் உலாவவிடலாம் என்ற நிலையினை உருவாக்கியுள்ளது. இணைய வளர்ச்சியின் ஒரு அங்கமாக இலவச இணையத்தள வழங்குநர்கள் தோற்றம் பெற்றுள்ளனர். புதிய எழுத்தாளர்களின் உருவாக்கம் அல்லது எழுத்தாளர்களினை ஊக்குவிப்பதற்கு இவ் இலவச இணையத்தள சேவை வழங்குநர் களின் பங்கு அளப்பரியது.

இன்றைய எழுத்தாளர்கள், தமது படைப்புக்களை மரபுரீதியாக அச்சடித்து வெளியீடு செய்யும் முறை மற்றும் இணையத்தளங்களில்த் தமது படைப்புக்களை வெளியீடு செய்யுமுறை என இரண்டு முறைகளிலே கையாளுகின்றனர். மரபுரீதியான எழுத்தியல் முறையில் ஒரு படைப்பாளன் தனது படைப்புக்களைப் படைத்தபின்பு அதனை மக்களிடம் சேர்ப்பதற்கு ஊடகங்களை அல்லது வெளியீட்டகங்களை நாடவேண்டிய நிலை உள்ளது. இதற்காகத் தனது படைப்பினை உருவாக்குவதற்கான காலத்தினை விட அதனை வெளியீடு செய்வதற்கான காலமும் செலவும் அதிகமாகக் காணப்படுகிறது. இது ஒரு படைப்பாளனைச் சோர்வடைய வைக்கின்றது.இதனாலே பல எழுத்தாளர்கள் இத்துறையினை விட்டகலுகின்றனர். பல எழுத்தாளர்களின் படைப்புக்கள் குடத்து வெளிச்சம்போல அவர் களின் அறைகளிலே முடங்கிப்போயுள்ளன. நவீன எழுத்துத்துறை யில் இணையத்தளத்தின் பிரவேசம் மேற்கூறிய இடரினைப் படைப்பாளனிடம் இருந்து முற்றாக நீக்குகின்றது. விரும்பிய நேரத்தில், விரும்பிய இடத்தில் சில நூறு ரூபாய்களுடன் அல்லது முற்றிலும் இலவசமாகத் தனது படைப்புக்களை வெளியிடலாம். இன்று பலராலும் இலத்திரனியல் புத்தகங்கள் பற்றி பேசப்படுகின்றன. அச்சுபுத்தகங்களைவிட இலத்திரனியல் புத்தகங்களை உருவாக்கு வதற்கான செலவும் மிகமிக குறைவு இதனைவிட இவற்றினை காவிச்செல்வது சுலபம். இன்னும் சிறிதுகாலத்தின் பின்னர் அச்சுப் புத்தகங்களை நூதனசாலைகளில் மட்டும் பார்க்கக்கூடிய நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும். எப்படி ஏடுகள் எம்மிடம் இருந்து மறைந்தனவோ அதுபோல அச்சுபுத்தகங் களும் எம்மைவிட்டு பிரியும் காலம் வெகுதொலைவில் இல்லை.

இணையத்தளங்கள் எழுத்தாளனுக்குப் பரிபூரண சுதந்திரத் தினை வழங்கியுள்ளன. எழுத்தாளன் எதனை எண்ணுகின்றானோ அதற்கு உடனடியாக வரிவடிவம் கொடுக்க இயலும் என்பதுடன் தனது சொந்த விமர்சனங்களை எவரினதும் புறநெருக்கீடு இன்றி முன்வைக்கலாம். அதுபோல வாசகர்கள் கூட தமது கருத்துக்களை உடனடியாகவே படைப்பாளனுடன் பகிர்ந்து கொள்ளலாம். இவ்வாறான ஊடுதொடர்பினை மரபுரீதியிலான எழுத்தியல் ஊடகத்தில் சாத்தியமில்லை. இதற்கு அப்பால் பல்லூடக (Multi Media) பொறிமுறையின் ஊடாக எழுத்தாளன் தனது கருத்துக்களிற்கு வலுச்சேர்ப்பதற்காக ஒலி ஒளிகளைக்கூட இணைக்கமுடிகின்றமை நவீன எழுத்தியல்த் துறையில் இணையத்தால் சாத்தியமாயிற்று.

அண்மைக்காலங்களில் எழுத்துத்துறைக்கு வலைப்பதிவு எழுத்தாளர்களின் (Blog writers) வருகை ஒரு வரப்பிரசாதமாகும். குறிப்பாக இணையதள ஜாம்பவான் ஆன "கூகிள்" நிறுவனத்தினரின் இலவச இணையத்தள சேவையான blogspot புதிய எழுத்தாளர்களுக்கு களம் அமைத்து முன்னணியில் உள்ளது. இளம் தலைமுறை எழுத்தாளர்களால் இவ் வலைப்பதிவுகள் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உள்ள தமிழ் வலைப் பதிவாளர்கள் குழுமங்க ளாகச் செயற்பட்டு வருகின்றனர். தமிழில் உள்ள இயங்குநிலை வலைப்பதிவுகளை ஓரிடத்திற் திரட்டும் முயற்சியில் பல்வேறு இணையத்தளங்கள் முன்னணியிற் செயற்படுகின்றன. தமிழ் வலைப்பதிவுகளைத் திரட்டுவதற்கு தமிழ்மணம், யாழ்தேவி போன்ற இணையத்தளங்களை இங்கு குறிப்பிடலாம். இவ் இணையத்தளங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வலைப்பதிவுகளுக்கு வருடாந்த ரீதியில் நடாத்தும் போட்டிகள் எழுத்தாளர்களைத் தொடர்ந்து எழுதுவதற்கு ஊக்கமளிக்கின்றன. அத்துடன் இணைய எழுத்தாளர்களிற்கான வாசகர் வட்டங்களை உரு வாக்குவதில் இவற்றின் பங்கு அளப்பரியது. இதனைவிட வாசகர் வட்டங்களை உருவாக்குவதில் இணைய எழுத்தாளர்களிற்கு மிகவும் பக்கபலமாக சமூக இணையத்தளங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக பேஸ்புக்,ருவிற்றர் போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

தகவல்த் தொழில்நுட்பத்தின் இன்னொரு புரட்சியே செல்லிடப் பேசிகளாகும். ஆரம்ப காலங்களில் தனித்து குரல்வழித் தொடர்பிற்காகப் பயன்படத்தப்பட்ட செல்லிடப்பேசிகளின் பயன்பாடு தற்போது பல்லூடகக் குறுந்தகவல் (MSM), இணையம் (internet) என விரிவடைந்துள்ளது. இவ் தொழில்நுட்ப வளர்ச்சியானது எழுத்தாளர் களை இன்னொரு வெளியீட்டு முறைக்கு அழைத்துச் செல்கின்றது. எமது நாடுகளில் கைத்தொலைபேசிகளிற்கான படைப்புக்களை உருவாக்கும் எழுத்தாளர்கள் மிகவும் குறைந்தளவில் அல்லது இல்லை என்ற நிலையே காணப்படுகிறது. ஆனால் மேலைத் தேயத்தில் குறுந்தகவல்கள் (SMS), மூலம் நாவல்கள் எழுதும் போக்கு அண்மைக் காலங்களிற் தீவிரமடைந்துள்ளது.

வலைப்பதிவுகளில் தற்போது அதிகளவில் இளம் தலை முறையினரே எழுதுகின்றனர். வயது முதிர்ந்த அனுபவ எழுத்தாளர்கள் இப்போதும் மரபுரீதியான அச்சடிக்கும் வெளியீடுகளிற்காக எழுதும் முறையில் உள்ளமை காணப்படுகிறது. இதற்கு வயது முதிர்ந்த அனுபவ எழுத்தாளர்கள் பலர், இணையம் பற்றியும் இது தொடர்பான விழிப்புணர்வும் இன்மையே இதற்கு முக்கியகாரணமாகும். இவ் அறியாமைகள் களையப்பட்டு அவர்களையும் நவீன எழுத்து முறைமைக்குள் கொண்டுவரவேண்டியது இளம் இணைய எழுத்தாளர்களின் வரலாற்றுப் பொறுப்பாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக எழுத்தாளருக்கு பல்வேறு நன்மைகளையும், சுதந்திரங்களையும் இணையத் தொழில்நுட்பம் வழங்கினால் இணைய எழுத்தாளர்களை எழுத்தாளர்களாக இன்னமும் எமது சமூகம் அங்கீகரிக்கவில்லை என்பது குறைபாடே. இணையத் தொழில் நுட்பம் எழுத்தாளர்களை உருவாக்குகிறதே தவிர தரமான எழுத்தாளர்களை உருவாக்கவில்லை. என்றே விமர்சனமும் உண்டு. இணையத் தொழில்நுட்பத்தின் கட்டற்ற சுதந்திரம் எதனையும், எப்படியும் எழுதலாம் என்ற போக்கிற்கு இட்டுச் செல்கிறது. பிரதி பண்ணுதல் இணையத்தில் சாத்தியமான ஒரு சாதாரண விடயம். ஒருவரின் படைப்பாக்கத்தினை அவரின் அனுமதியின்றி இணையத் தளங்களில் பிரசுரிக்கும் போக்கு தமிழ் இணைய எழுத்தாளர்களிடம் காணப்படுகின்றமை ஒரு அருவப்பான உண்மை. எமது நாடுகளில் காப்புரிமைச் சட்டம், சைபட்டா குற்றங்கள் தொடர்பான சட்டங்கள் காத்திரமானதாக இல்லை என்பது ஒரு பாரிய குறைபாடு ஆகும்.

எனவே மேற்கூறியவற்றினைத் தொகுத்து நோக்குமிடத்து எழுத்தாளனுக்கு ஒரு புதிய வெளியினை இணையம் உருவாக்கி யுள்ளது என்றால் மிகையாகாது. இதில் ஆங்காங்கே காணப்படும் குறைகள் களைந்து இணையத்தில் எழுதுவதினை ஊக்கப்படுத்தல் இன்றைய காலத்தின் அவசியமாகும்.

**திரு.பா.முகுந்தன்.**
**நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்.**
**பிரதேச செயலகம். – பூநகரி.**

கேரதீவு சங்குப்பிட்டிப் பாலம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "பூப்பூச்சடங்கும் பூநகரியும்"

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதேச செயலகப் பிரிவுகளுள் ஒன்றான பூநகரிப் பிரதேசத்தின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வாழுகின்ற மக்களிடையே கடைப்பிடிக்கப்படும் வாழ்வியற் சடங்கு நடைமுறைகளுள் ஒன்றான "பூப்பூச்சடங்கு" நடைமுறைகளை விவரணப்படுத்தும் செயற்பாட்டினை இக்கட்டுரைமூலம் அவதானிக்கலாம்.

பெண்கள் வயதிற்கு வருவதைக் கொண்டாடும் சடங்கே "பூப்பு" எனப்படுகிறது. அதாவது உடலின் பக்குவத்தை, மனதின் மலர்ச்சியை, பிரக்ஞையில் உண்டான ஒரு புதுவிழிப்பைக் குறித்து மகளிர் கொண்டாடும் விழாச் சடங்காக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூப்படைதல் என்பது , சாமத்தியப்படுதல், பெரிசாகுதல், புத்தியறிதல், பருவமடைதல், குந்துதல், சமைதல், பக்குவப்படல் முதலான சொற்பிரயோகங்களாற் குறிப்பிடப்படுகின்றது. பிராமணர் "ருது"வாகுதல் என்று சுட்டுகின்றனர். அறிவியல் ரீதியில் நோக்கின்; பெண்ணுடைய உடலின் உள்ளுறுப்புகளிலே ஏற்படும் வளர்ச்சி – வேறுபட்ட மாற்ற நிலைகளின் அறிவிப்பாகவே இதனைக் கொள்ள முடிகிறது.

"பூப்பு" அடைந்ததை உறுதிப்படுத்திய உடனேயே சடங்குகள் தொடங்கிவிடுகின்றன. பூப்படைந்த பெண்ணின் தாய்மாமனுக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும், குடிமகன் எனப்படும், சலவைத் தொழிலாளிக்கும் அழைப்பு விடுவிக்கப்படுகின்றது.

குறித்த பெண்ணுக்கு சங்கிலி, காப்பு, மோதிரம் முதலிய நகைகள் உடனடியாக அணிவிக்கப்படுகின்றன. தொடர்ந்து சிறிது குப்பையை ஒரு இடத்திற் குவித்து அதன்மேல் குறித்த பெண்ணை உட்கார வைத்து தலையில் நீர் வார்த்தபின்; வீட்டிற்குள் கொண்டுவந்து; குறித்த பெண்ணுக்குப் பிஞ்சுக் கத்தரிக்காய்ச்சாறு, நல்லெண்ணெயும் கலந்து குடிக்கக் கொடுப்பார்கள். அத்துடன் வேப்பிலைத் துளிர், மஞ்சள், நற்சீரகம் அரைத்து உருண்டைகளாக்கி விழுங்கக் கொடுப்பர். தொடர்ந்து வெண்ணிற ஆடைகளைக் கொடுத்து வீட்டின் ஒதுக்குப் புறமான இடத்தில் பூப்படைந்த பெண்ணை அமரச் செய்வர். அப்பெண் படுக்கும் பாய்க்குப் பக்கத்தில் விளக்குமாறும், காம்புச்சத்தகமும், வேப்பிலைகளும் சேர்த்துக் கட்டிக் காவலாக வைத்துவிடுவர். மலசலகூடம், குளியலறை முதலான இடங்களுக்குச் செல்லுகின்றபோது காவலாகக் கட்டிவைத்த பொருட்களையும் எடுத்துச் செல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூப்படைந்த பெண்ணைப் பார்வையிட வருவோர் நல்லெண்ணெய், உழுந்து, சீனி, வெங்காயம், முட்டை முதலான பொருட்களைக் கொண்டுவந்து கொடுக்கின்றனர்.

பூப்படைந்த காலத்தில் பெண் உடுத்தும் உடுபுடைவை வகைகளைச் சலவைத் தொழிலாளியே ஒவ்வொருநாளும் வந்து எடுத்துச் சென்று சலவை செய்து தருவதும் இங்கு வழக்காக உள்ளது.

பூப்படைந்த தினத்திலிருந்து 31ஆம் நாள் துடக்குக் கழிவு நடைபெறுகின்றது. பிராமணரைக் கொண்டு பூசை செய்து துடக்குக் கழிவு நடைபெறுகின்றது. எனினும் நாகரிக மேம்பாடு காரணமாக பூப்பூச்சடங்கு தற்போது வெகுவிமரிசையாகக் கொண்டாடப் படுகின்றது.

பூப்படைந்த பெண்ணின் தாய்மாமன் "சீர்" எனப்படும் தேங்காய், பலகாரம், வாழைக்குலை, வெற்றிலை, தேசிக்காய், உடுபுடைவை முதலான பொருட்களுடன் ஊர்வலமாக வந்து சீர் பொருட்களைக் கொடுக்கின்றார். தொடர்ந்து பூப்படைந்த பெண்ணுக்குக் கையில் வெற்றிலையைச் சுருளாக்கி, இரண்டிலும் நாணயமிட்டு, வெள்ளைத் துணியால் முக்காடிட்டு பால் அறுகு வைக்கின்றனர். பின்னர் குறித்த பெண்ணை வீட்டு வளவிற்கு வெளியே அழைத்துச சென்று தலையில் நீர் வார்க்கின்றனர். வீட்டு வளவினுள் நீர்வார்க்கும் வழக்கம் இங்கு இல்லாதிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இது தொடர்பான நம்பிக்கைகள் ஆய்விற்குரியவை.

தொடர்ந்து வீட்டிற்குள் பெண்ணை அழைத்துவந்து பிராமணர் மூலம் பூசை செய்து கொள்கின்றனர். பின்னர் பெண்ணை அலங்காரம் செய்து மணவறைக்கு அழைத்து வந்து, நிறைநாழி, தேங்காய், பிட்டு, களி, வெற்றிலைபாக்கு, சோறுகறி, பலகாரம், சந்தனம், குங்குமம், பன்னீர், பூ, பால், உரொட்டி, வேப்பிலை முதலியவற்றால் ஆராத்துகின்றனர். இவ்வாறு ஆராத்தும் பொருட்களும், பெண்ணுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையில் நீராட்டும்போது உடுத்திருந்த உடுப்புக்களும் குடிமகனாகிய சலவைத் தொழிலாளிக்கே வழங்கப்படுகின்றன. தொடர்ந்து ஆசிர்வதிக்கும் சடங்கின்போது "மொய்" எழுதும் வழக்கம் காணப்படுகின்றது. அதாவது அன்பளிப்பு வழங்கும் பணத்தினை உடனடியாகவே பதிவேட்டிற் கொடுக்கல் வாங்கல் தொடர்பாகப் பதித்துக் கொள்கின்றனர். யாழ். மாவட்டத்தில் இத்தகைய கொடுக்கல்வாங்கல் பதிவு தன்மை மாற்றமடைந்து? சடங்கிற்கு வருவோருக்குப் பொருட்கள் வழங்குகின்ற செயற்பாடு கூடியளவில் காணப்படுகின்றது. இது பொருளாதார நாகரிக மயப்பாட்டின் ஒரு கிளையாகவே கருத முடிகின்றது.

நவீனயுகப் பாய்ச்சலின் பின்னணியான புகைப்படம், வீடியோ முதலியன பூநகரிப் பிரதேச பூப்பூச்சடங்கிலும் தமது செல்வாக்கினை முதன்மைப்படுத்தி, சடங்கு ஓட்டத்தில் தமது தடங்களைச் சாதிப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

ஒவ்வொரு பிரதேசத்திலும் அந்தந்த இடத்தின் சமூக பொருளாதார சூழல் அமைவுகளுக்கு ஏற்ப நடாத்தப்பட்ட சடங்குகள் – அவை தொடர்பான நம்பிக்கைகள் முதலியன; சமூக, பொருளாதார, சூழல் மாற்றமுறும்போது நெகிழ்ந்தும், பிறழ்ந்தும், மறைந்தும் செல்வது அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இந்தவகையிலே "பூப்பூச் சடங்கு" தொடர்பான சடங்கு முறைமைகள், அவை தொடர்பான நம்பிக்கைகள் முதலியன, சமய–பண்பாட்டு அடிப்படையில் நோக்கின்; துடக்கு – தோஷம் – நாணம் முதலான பயில் நிலையில் பூநகரிப் பிரதேசத்தில் காணப்படுகின்றன. அத்துடன் வர்ணாச்சிரமப் பொருளாதாரப் பின்னணியும் இச்சடங்குகளிற் சார்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**திருமதி ற. நரேந்திரா,**
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூநகரிக் கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணித்தலை மணல்மலைத் தொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வழிபாட்டின் வழிப்படுத்தல்

சைவ சமயத்தில் சிவாலய வழிபாடு என்பது சமய ஒழுக்கத்துக்கு நிறைவு தருகிற ஓர் அதிசிறந்த அங்கம். சிவானுபவம் பெற்ற ஞானிகளும் கூட, உடலோடு இருக்கின்ற வரை, தமது சுத்தநிலையின் நீங்கி, உலகமுகப்படுதல் உண்டு. இந்நிலையில் யான் எனது என்னும் மாசு ஒட்டாதபடி செய்யத்தக்கவை . தம்மோடு ஒத்த மெய்யன்பரோடு கலந்து நிற்றலும், திருக்கோயிலில் உள்ள உருவத் திருமேனிகளையும், திருவேடத்தையும் சிவன் எனவே தெளியக் கண்டு தொழுதலுமாகும். இக் காரணம் பற்றியே.அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் என்ற வேண்டுகோளும், கோயில் இல்லா ஊரில் குடியிருக்கலாகாது. என்ற வழக்கும் எழுந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோயில் வழிபாடு**

சைவராயுள்ளோர் அனைவரும் நாள்தோறும் சிவாலயம் சென்று சிவ வழிபாடு செய்யும் கடப்பாடு உடையவர். இறைவன் எங்கும் நிறைந்திருந்தாலும், அவனை மனத்தினாலே மட்டும் வழிபாடு செய்வது எல்லோருக்கும் இயல்வதன்று. இதனாலேயே வழிபாட்டில் ஆலயத்திற்குச் சிறப்பான இடம் அமைகிறது. ஆலயம், மக்கள் அனைவருடைய வழிபாட்டுக்கும் என்று அமைந்த தனி இடம், பசுவினிடம் எந்த இடத்தில் பால் தோன்றுகின்றது என்று சொல்ல முடியாவிட்டாலும், அது மடி வழியாகச் சுரப்பது போல, எங்கும் வியாபித்திருக்கும் இறைவன், சிவலிங்கத் திருமேனி மூலமாகத் தோன்றி, ஆன்மாக்களுக்கு அருள் புரிகின்றார். மார்க்கண்டேயருக்கும் கண்ணப்பருக்கும் அருள் புரிந்த வரலாறுகள் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆதலால் சிவலிங்க வழிபாடும் திருக்கோயில் வழிபாடும் மிக்க அவசியமாகின்றன.

திருக்கோயில் வழிபாடு செய்யும்போது, பொருள் தெரிந்து வழிபடுவது சிறப்பு, திருக்கோயிலில் பல தெய்வ வடிவங்கள் அமைப்புக்கள் இருந்த போதிலும் அவற்றுள் ஒன்றேனும் பொருளற்றதாக இல்லை. யாவும் தத்துவார்த்தங்களை அடக்கியுள்ளன. சிலவற்றைக் குறிப்பிட்டுச் செல்வோம். சைவனுக்குத் திருவீதிகள் யாவுமே தெய்வீகம் பொருந்தியவை. உள்ளே இருப்பது சூக்ஷ்ம லிங்கம், கோபுரம் ஸ்தூலலிங்கம், நெடுந்தொலைவில் புறத்தேயிருந்து பார்த்தாலே தெரியும்படியாக அமைக்கப்பட்டிருப்பது கோபுரம். எந்த நேரமும் தெய்வ நினைவு மனத்தில் இருக்க வேண்டும் என்பதற் காகவும், அக்காலத்தில் கோயிலுக்குள்ளே அனுமதிக்கப்பெறாதவர் கூடத் தொலைவிலிருந்து கண்டு தெய்வ நினைவு பெறுவதற்காகவும், கோபுரமானது பெரிய வடிவமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லை நடராசப் பெருமான் ஆலயத்தின் கோபுரமானது, சுற்றி ஐந்து ஆறு மைல்கள் வரையில் நன்கு தெரியும். இவ்வளவு தொலைவில் வாழ்கின்ற சைவ முதியவர்கள் அனேகர் இன்றும் கூட மாலையில் சூரியன் மறையும் நேரத்தில் அனுட்டானம் முடித்துக் கோபுர தரிசனம் செய்த பிறகே இரவு உண்ணும் நியமம் உடையவர்கள். மழைக் காலத்தில் வானம் மப்பும், மந்தாரமுமாய் இருந்து, கோபுரங்கள் மறைக்கப்பட்டுக் கண்ணுக்குப் புலப்படாமல் இருந்தால்,இவர்கள் அன்றிரவு உணவு உட்கொளவ்தில்லை. மறுநாள் பொழுது புலர்ந்து கோபுர தரிசனம் ஆனபிறகு தான் உண்பார்கள்.

கோபுரத்தைத் தரிசித்து உள் நுழைந்தவுடன் கொடி மரம் காணப்படும். கொடிமரத்தில் இடபம் பொறித்த கொடியையும் அதைக் கட்டிய தருப்பைக் கயிற்றையும் காணலாம். கொடிமரம்– சிவம், கொடிச்சீலை –ஆன்மா–தருப்பைக் கயிறு பாசம் என்பது ஒரு கருத்து. (கொடி ஏறியுள்ள காலம்)

கொடிமரத்தைக்க கடந்தால் பலிபீடமும், நந்தியும், அதற்கப்பால் கருவறையிலுள்ளே சிவலிங்கமும் காணப்படும். சிவலிங்கம் பரம்பொருள்; சிவலிங்கத்தை நோக்கியிருக்கின்ற நந்தியே ஆன்மா; பலிபீடமே நாம் பலி கொடுக்க வேண்டிய மனம் அல்லது ஆணவமாகிய பாசம். பலிபீடத்திற்கும், சிவலிங்கத்திற்கும் இடையில் அமைந்திருக்கும் நந்தியானது பாசத்தை விட்ட ஆன்மா, இறைவனுடைய அருள் ஒளியிலே கலந்து சிவமாவான் என்ற நிலையைக் காட்டுகிறது.

ஆலயத்துள் அமைக்கப்பெற்ற சிவலிங்கம் ஆன்மாக்கள் வழிபாட்டுக்காக ஏற்பட்ட பரார்த்தலிங்கம் என்பர். சிவபெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவமாயும், உருவமாயும் இருந்து ஆன்மாக்களுக்கு அருள்கின்றார். அருவத் திருமேனியை அவனருள் பெற்ற ஞானிகளே அருட்கண்ணால் அகத்தே காண்பர். உற்சவம் கொண்டு வருகின்ற சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், பிச்சாடனர், நடராசர், கணேசர், முருகர் முதலான மூர்த்திகள் உருவத்திருமேனிகள். சிவலிங்கமானது அருவமும் இல்லாமல் உருவமும் அல்லாமல் உள்ள ஒரு மூர்த்தம், அருவுருவம் (ரூபாரூபம்)

சிவாலயங்கள் பெரும்பான்மையானவை கிழக்கு நோக்கி இருக்கும் சில மட்டும் மேற்கு நோக்கிய சந்நிதிகள். இவை ஞானம் அருள்பவை என்ற கருத்து உண்டு. சைவர், கோபுர வாயிலில் பணிந்து திருநந்திதேவரின் விடைபெற்று உட்சென்று, முதலில் துவார விநாயகரைத் தரிசிக்க வேண்டியவர். விநாயகர் சிவபெருமானின் புதல்வர் என்று சொல்வது உபசாரம். விநாயகர் சிவபெருமானின் அருட்சக்தியே. அவரின் வேறல்லர். விநாயகர் ஓம் என்ற பிரணவ ஒலி வடிவினர். ஆதலால், அவரை முதலாவதாக வணங்க வேண்டும். அவரை வழிபட்டுப் பின்னர் சிவலிங்கப்பெருமானை வழிபட வேண்டும். பூசா காலங்களிற் சென்று கற்பூர தீப ஆராதனை நடைபெறும்போது வழிபடுவது சிறப்பு. வழிபாடு செய்பவர், தாமும் வழிபாட்டுக்குரிய மலர், பழம், கற்பூரம் முதலியன சேர்ப்பித்து வழிபடுதல் அவசியம். வழிபடும் போது அவரவர் பெருமானை அருட்பாசுரங்களால் துதித்துத் தம் குறைகளை விண்ணப்பித்தல் தக்கது. சிவாலய வழிபாட்டில், பூசாகாலத்தின்போது சிவ சந்நிதியில் பஞ்ச தோத்திரம் பாடுவது மரபு. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபூராணம் ஆகிய ஐந்திலும் ஒவ்வொரு பாடல் பாடுவது பஞ்ச தோத்திரம் எனப்படும். பதிகம் பெற்ற தலமாயின் தலப்பதிகம் இயன்ற அளவு ஓத வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடராச வழிபாடு**

நடராச தரிசனம். நடராசவடிவமானது உலகத்திலேயே மனிதனுடைய சிற்பப்படைப்புக்களில் ஒப்புயர்வற்ற பெருமையும் பேரழகும், கற்பனைத் திறனும், அருள் வடிவம் வாய்ந்தது. சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்களின் பூரண அமைப்பே நடராசவடிவம். அவருடைய தில்லைநடனம் ஆனந்தத் தாண்டவம் என்று சொல்லுவர். உடுக்கையேந்திய கையினால் மாயையைப்போக்கி, நெருப்பேந்திய கையினால் வல்வினையைச்சுட்டு, ஆணவமலமான முயலகனை ஊன்றிய பாதத்தால்போக்கி, எடுத்த கரத்தால் அருள்தந்து, தூக்கிய திருவடியினாலே ஆன்மாவை நித்தியமான பேரானந்தத்தில் தோயச் செய்தலே நடராச நடனத்தின்பொருள். இது பஞ்சாக்கரநடனம்.

சப்திக்கின்ற உடுக்கையில் தோன்றிய நாதத்திலிருந்து சிருட்டித் தொழில்தொடங்கிற்று. அமைந்தகரம் காத்தல்த் தொழிலைக் காட்டுகின்றது. கையிலேந்திய அக்கினி சங்காரத்தொழிலாகும். முயலகன் மீது ஊன்றிய மலர்ப்பாதம் ஆன்மாக்கள் வினைக்கீடாகக் கன்மம் அனுபவித்தல்வேண்டி, மறைத்தல் தொழில்செய்வது. இது ஐந்தொழில் (பஞ்ச கிருத்திய) நடனம். பெருமானதுஅருட்சக்தி, நடராசப் பெருமான் நடனம் செய்யும்போது, சிவகாமசுந்தரி என்ற திருநாமம்தாங்கியிருப்பார்.

**பிற மூர்த்திகள்**

நடராச தரிசனத்தின் பின் உமாதேவியாரைத் தரிசிக்க வேண்டும். உமாதேவி என்று தனியாக ஒரு தெய்வம்இல்லை; சிவபிரானது அருளையே சக்தி என்று தனியாகப் பிரித்துச் சொல்லிவணங்குகிறோம். உலகுக்கெல்லாம் தாயாகின்ற சிவபிரானது கருணைத் தன்மையையே தனிப்படுத்தி அம்பிகைஎன்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமாதேவியாரை வணங்கிய பின் முருகப்பெருமானை வணங்குதல் மரபு. முருகப்பெருமானைச் சைவர் சற்குரு பாவனையினால் வணங்குவர். முருகப்பெருமான் சிவபெருமானின் புதல்வர் என்று கூறுவது உபசாரம். அவன் சிவபிரானின் வேறல்லர். சிவபிரானது சக்தியேமுருகன். முருகனுக்கு வள்ளி அம்மையார் இச்சாசக்தியும், தெய்வயானை கிரியாசக்தியும், கையிலேந்திய வேல் ஞானசக்தியும் ஆவர்.

முருகனை வணங்கிய பின் வைரவர் சண்டேசரை வணங்கல் வேண்டும். சண்டேசர் சிவாலய தரிசன பலனை அளிப்பவர் என்று கருதுதல்மரபு. ஆன்மாக்களுக்கு இறையருளில் பூரணநம்பிக்கை யூட்டுபவர். இப்பெருமான் சாதாரண குழந்தையாகப் பிறந்து வேறு நினைவில்லாத அன்புக்கு காரணமாகச் சிவாலயந்தோறும் தனிக் கோயிலும், கிரீடமும், போனகமும், சிவபெருமானது மாலையும், ஈசன்என்ற பெயரும் பெற்றிருப்பது, ஆன்மாக்கள் அனைவருக்குமே உய்தி உண்டு என்ற பெருநம்பிக்கையை ஊட்டுவதாகும். விநாய கருக்கு வழிபாடு செய்யும்போது, தலையில் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போடுவது மரபு போன்று சண்டேசர் சந்நிதியில் விரலைச் சொடித்து அவருக்கு விழிப்பூட்டிக் கும்பிடவேண்டும். சிவபெருமான் அனுக்கிரகம் செய்ய, எந்நேரமும் அவரது திருவருளிலே இவர் தோய்ந்திருப்பவர் ஆதலால், இவருக்கு விழிப்பூட்டிஅறிவிக்க வேண்டுமென்பது கருத்து.

சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், என்ற நால்வர் பாடிய அருட்பாசுரங்கள் இன்று சைவத்தின் உயிர் நாடி, இப்பாசுரங்கள், ஓர் ஐந்நூறு வருஷ காலம் சோழ மன்னரைத் தமிழ் நாடெங்கும் பெருங் கோயில்களைக் கற்றளியாக எடுத்துப் பரிபாலிக்குமாறு தூண்டின. இக்கோயில்களாலேயே இன்று சைவசமயம் உயிர்த் தத்துவம் ததும்பிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறது. ஆகவே, நால்வருடைய கொடையே இன்றைய சைவம் என்பது பிழையாகாது. எனவே, சிவாலயத்தில் சண்டேசர் வழிபாட்டுக்கு முன், நால்வர் வழிபாடு செய்யத்தக்கது.

இந்த அளவு வழிபாடு எல்லாக் கோயில்களிலும் நிகழத்தக்க தாகும். அம்பிகையின் கோயில் பொதுவாக சுவாமி சந்நிதியில் வடபுறத்தில் தெற்கு நோக்கி இருக்கும். ஆனால் அம்பிகையைப் பூசித்துத் திருமணம் கொண்டருளிய தலங்களில் சுவாமி கோயிலுக்குப் பக்கத்தில் தெற்கில் அல்லது வடக்கில் அம்பிகை கோயில் கிழக்கு நோக்கியிருப்பதும், தலவிசேடங் காரணமாக அம்பிகை வெவ்வேறு இடத்தில் வேறுதிசை நோக்கியிருப்பதும், புறத்தே தனிக் கோயிலில் இருப்பதும் உண்டு. சாதாரண கோயில்கள் அனைத்திலும் அர்த்த மண்டபம். கருவறை இவற்றின் தென்புறக் கோட்டங்களில் நர்த்தன கணபதி, நடராசர் அல்லது ஜீரஹாரேசுவரர் (இவரருகே பேய் வடிவங்கொண்ட காரைக்கால் அம்மையார் வடிவம் இருப்பது மரபு) தட்சிணா மூர்த்தி என்ற முறையில் அமைந்திருப்பர். மேல்புறத்தில் மையக்கோட்டத்தில் லிங்கேற்பவரனும், திருமாலேனும் இருப்பர். வடபுறக் கோட்டங்களில் கோமுகையின் மீது பிரமனும். அடுத்து துர்க்கையும் இருப்பர். பின்னும் பிச்சாடனர் முதலியோர் இருப்பதும் உண்டு. சனி மூலையில் பைரவர். சனி, சந்திரன், சூரியன் போன்றோர் இருப்பதும் உண்டு. முதல் பிரகாரத்தில் நிருதி திசையில் தனி விநாயகர் கோயிலும், கருவறைக்கு நேர் பின்னே முருகர் கோயிலும், வாயு திசையில் இலக்குமி கோயிலும் எல்லா இடங்களிலும் இருக்கும். பெரியகோயில்களில் ஐந்து பிரகாரங்கள் சொல்வர். உட்பிரகாரத்தின் வடபுறத்தில், சண்டேசர் சுவாமி தெற்குத் திசையை நோக்கியவாறு தனிக்கோயிலில் இருப்பர். நால்வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபத்து மூவரும் வசதி உள்ள இடங்களில் தென் திருமாளிகைச் சுற்றில் இருப்பர். இதுவே பொதுவான கோயில்களின் அமைப்பு. சிறப்பான கோயில்களில் இன்னும் அதிகமான மகேசுவர மூர்த்தங்கள் இருக்கும்.

**மற்றவை**

சிவபெருமானுக்குரியது இடபவாகனம். இதுவும் சைவர் வழிபாட்டுக்கும், போற்றுதலுக்கும் உரியது. இந்திய மண்ணில், மனித வாழ்க்கைக்கு எல்லாவிதத்திலும் உதவியது ஆனினம் பசுவும் காளையும், இரண்டையும் வழிபாட்டுக்குரியனவாய்ச் சைவர் கொண்டமை பொருத்தமே. தரும தேவதையே இடப வடிவம் கொண்டு பெருமானைத்தாங்குகிறது. பெருமான் தருமத்தைக் காப்பவன். ஆதலால் என்றும் அவ் இடபமே வாகனமாகும். சிவபெருமான் திரிபுர சங்காரம் செய்த காலத்தில், எல்லாத் தேவதைகளையும் உறுப்பாகக் கொண்ட தேர், அத்தேவதைகளின் கர்வம் காரணமாகப் பொடியாக நொறுங்கியபோது, காத்தற் கடவுளாகிய திருமால் இடபவாகனமாகப் பெருமானைத் தாங்கினார். இடபம் வேறு, திரு நந்தி தேவர் வேறு இவர் சிவகணத் தலைவர், ஞான பரம்பரைக்கு முதல்வர். இவ்வகையான சைவாலய வழிபாடு சைவர்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்த அறவியல் வாழ்க்கை என்றால் மிகையாகாது.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம் "

**ஈழவூர் சைவப்புலவர்,**
**குமாரசாமி சுமுகலிங்கம். பி.ஏ**
**வேரரவில், பூநகரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரின் பூந்துணரே வாழி !

பண்டைய மன்னர் ஆண்ட எங்கள் ஊராம்
பாங்கான நெற் கழனிகள் சூழ்ந்திலங்கும் எங்கள் ஊர்
பிறர்க்குதவிடும் வேளாண் தொழிலில் துலங்கும் ஊர்
பீடையின்றி மக்கள் செறிந்து வாழும் ஊர்

புவிதனிற் புகழுடன் பேசப்படும் பேரூரில்
பூநகரின் புதுமலராய்ப் பூந்துணர் எனும்
பெயர் தாங்கியே பேரொளி பரப்பும் இந்துணரில்
பேர் பெற்ற படைப்பாளிகளின் கலைப் படைப்புக்களாம்

பைங்குவளை மலராய்ப் பலரது கரங்களில் விரியும்
பொங்குதமிழின் ஒளிபரப்பியே பூநகரெங்கும்
போகும் திக்கெல்லாம் புதிய செய்தி சொல்லியே
பூநகரின் பூந்துணரே நீடூளி வாழி வாழியவே.

பூநகர்
**பொன். தில்லைநாதன்**
(பூநகர் பித்தன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பூந்துணர்"
# சுடர்விட்டுப் பிரகாசிக்கும்

பூநகரியில் உள்ளம் பூரிக்கும் புதியதோர் செய்தி
பூவரும்பாய் மலராய்க் கனியாய் மலர்கிறது பூந்துணர்
பூந்துணருக்கு மாலை சூட்டியே வாழ்த்திடுவோம் – நாம்
பூச்சரம் சூட்டி பூந்துணரை வரவேற்போம்.

பூநகரி ஓர் மலர் புத்தொழி பரப்பாதா ?
பூபாளம் இசைக்கப் புதுமணம் வீசாதா ?
பூநகரியிற் காலம் காலமாய் எதிர்பார்த்துக் காத்திருந்தோம்.
பூந்துணர் கன்னிச்சுடராய்க் கனிந்து வந்ததுவே!

பூந்துணர் எனும் நாமம் பூண்டு மலர்ந்து
பூத்துக்குலுங்கி நறுமணம் வீசுதே.
பூவான உள்ளத்தோடு புது நாமம் காண்போம்
பூவுலகெங்கும் பட்டொளி வீசி உலாவரும்.



பூநகரியின் புலம்பெயர் எம் உறவுகளே
பூந்துணர் உங்கள் கரங்களில் தவழும்
பூநகர் உறவுகள் சுடர் தொடர்ந்திட
பூந்துணருக்கு உங்கள் ஆதரவு வேண்டுகின்றோம்.

பூந்துணருக்கு ஆதரவளிப்பீர் இது உறுதி.
பூரிப் படைவோம் அறிவுசால் ஆக்கங்கள் தாங்கி
பூந்துணர் ஆண்டுக்கிரண்டாய் மலரும்
பூநகரில் நாம் புது யுகம் படைப்போம் வாரீர்.

பூநகர் வண்ணன்

**ஆக்கம்: தி. ஆனந்தவண்ணன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வருத்தங்களுக்கேற்ற சில கை வைத்தியங்கள்

1. பல்வலி: நத்தைச்சூரி, குப்பைமேனி, அறுகம்புல், கொய்யா இலை, இயற்கைப் பற்பொடி.
2. முடி உதிர்தல்: புடலங்காய் சாப்பிடவும்.
3. உடல் அரிப்பு: புழுங்கலரிசி ஊற வைத்த தண்ணீர் தேங்காய்ப்பால், குப்பைமேனி, கொத்த மல்லிக்கீரை, மலை வேம்பு அவித்துக் கழுவவும்.
4. உடல் உஷ்ணம் குறைய: பூசனிக்காய்ச் சாறு வாழைத்தண்டுச்சாறு, கரட்சாறு அருந்த வேண்டும்.
5. பக்கவாதம் வராமல் தடுக்க: வெங்காயப்பூண்டு, வாழைத்தண்டு, சுக்குக்காபி, இயற்கைப்பூடு, நீருள்ள பழச்சாறு உண்ணவும்.
6. அல்சருக்கு: உப்பு, காரம், ஊறுகாய், பால் உணவுகள், பால் உணவை நிறுத்தினால் பறந்துபோகும் வியாதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மூட்டுவலி: அறுகம்புல், தரைப்பசளி, முடக்கொத்தான், இஞ்சி, பூண்டு, வெங்காயம், கீரைகள் சூப் சுக்குக் காபி.

8. வயிற்றுப்புண் ஆற: சீரகம், மணற் தக்காளி, பூசனிக்காய் சிறந்தது.

9. காதுக்குத்துக்கு: மிளகாய்ச் செத்தலை நுனியால் வெட்டிவிட்டு நல்லெண்ணெய்விட்டு தேங்காய்யெண்ணெய் விளக்குகளில் சூடுகாட்டி, வெண்சூட்டுடன் காதில்விடவும். அல்லது பிஞ்சு வடலி மட்டையை நெருப்பில் வாட்டிப் பிழிந்து காதில் விடவும்.

10. மூலக்கொதி: பழஞ்சோற்றுத் தண்ணிக்குள் நல்லெண்ணெய் விட்டு ஐந்து நாட்கள் வெறுவயிற்றிற் குடித்துவர மூலக்கொதி நிற்கும்.

11. சூட்டு இருமல்: வெற்றிலையை மடித்து நல்லெண்ணெய் விட்டுக் காலை, மாலை இரண்டு நாட்களுக்குச் சாப்பிட்டுவர இருமல் நிற்கும்.

12. குதி வாதத்திற்கு:


சாராயம், நல்லெண்ணெய், ஒரு அளவாக எடுத்து விளைவு கற்பூரம் போட்டுக் காய்ச்சி வெண் சூட்டுடன் பூசிவர மாறும்.

**யோகராசா புஸ்பராணி,**
பிள்ளையார் நகரி,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை வளர்த்து
வாழ வழி வகுத்துத் தந்த...
வளர்ந்த பின்பு
பலி பீடத்திற் கொண்டு
பலியிடலாமா ?




சிறு பிள்ளை முதல்
உங்கள் கண்களுக்கு முன்னே
வளர்ந்த உயிர் நான்

இந்தத் தோட்டத்தில் தான்
என் தாய் தந்தையுடன்
ஓடி விளையாடிச் சந்தோஷப்பட்டது.

பகல் முழுவதும் மேய்ந்த களைப்பில்
இந்த வேப்பமரத்தடியில் தான்
நானும் என் தாய் தந்தையும்
இளைப்பாறி அசைபோடுவது

# ஒரு ஆட்டின் கதறல்...

அதோ தெரிகிறதே குளம்
இந்தக் குளத்தில் தான்
நான் நீர் அருந்த வரும்போதெல்லாம்
இந்தக் குளத்து மீன்கள்
என்னுடன் நட்புக் கொள்ளும்.



நானும் என் நண்பர்களும்
இந்த இடத்தில் தான்
முட்டிக்கொண்டு பலம் பார்ப்போம்
பிறகு துள்ளிக் குதித்து
அரட்டை அடித்துச்
சந்தோஷப்படுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை ஒரு பிள்ளையைப் போல
பெயர் சொல்லி அழைத்து
அரவணைத்துக் கொண்டீர்கள்.
என் கன்னத்தில் முத்தங்கள்
இட்டதை மறந்து விட்டீர்களா ?

என் பிஞ்சுக் கைகள்
நஞ்சு கலந்துள்ள
உங்கள் நெஞ்சில்தான்
ஏதோ ஒன்று மிஞ்சிவிட்டது.

பால் கொடுத்த மடியில்
பாசம் மட்டுமே கலந்திருக்கும்
அதே என் தாயின் பாலைத்தான்
நானும் குடித்து வளர்ந்தேன்.
என் தாய் எனக்குக் கற்றுக் கொடுத்தது
பாசம் மட்டுமே.
அந்தச் சாயலில் தான் நானும்
இருப்பேன்.

என்னை வளர்த்து
வாழ வழி வகுத்து தந்த....
வளர்ந்த பின்பு
பலிபீடத்திற் கொண்டு
பலியிடலாமா ?



இறைவனின் பலிபீடத்தில்
என்னுடைய இரத்தம்தான்
சிந்த வேண்டுமா ?
என்னுடைய இரத்தத்தில்
அப்படி என்ன வேண்டுதல்
அடங்கியுள்ளது ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்கள் கடந்து விட்டது.
நாகரிகம் பரவிவிட்டது.
ஆனால் மனிதனின் மனம் மட்டும்
இன்னும் ஏன் முதலாம்
நூற்றாண்டிலேயே மூழ்கியுள்ளது ?

என் கழுத்தை அறுத்து
என் தோலை உரித்து
என் இரத்தத்தில் கை நனைத்து
பலிபீடத்தில் தெளித்து
வேண்டுதல் நிறைவேற்றத்தான்
வேண்டுமா ?

உங்கள் வேண்டுதலில்
மட்டுமே குறியாய் இருக்கும்
நீங்கள் என் இதயத்தில்
இருக்கும் ஏக்கங்கள் காணத்
தவறியதென்ன ?



என்னைக் கொன்று
என் உயிரைக் கொன்று
என் ஜீவன் போன பின்பு
உங்கள் வேண்டுதல்
நிறைவேறி விட்டதென்று
அர்த்தமா ?


இனி நான் மாற வேண்டும்.
என்னோடு மட்டுமே
முடிந்துபோகட்டும்
இந்த அத்தியாயம்
கொடுமையில் மகிழ்ச்சி காணும்
இல்லங்கள் மாறட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானே இதற்கு முற்றுப்புள்ளியாய்
மாறிவிடுகிறேன்.

தன்னைப் பலியிடப் போகும்
அந்த இறுதி நேரத்திலும்
ஆண்டவரின் பலிபீடத்தில்
ஆடு நின்று சப்தமாக
வேண்டிக் கொண்டது.



இறைவா...
ஒரு உயிரைக் கொண்று
குளிர் காயும் இந்தச்
சமூகத்தை மாற்றி விடு
சடங்காச்சார சம்பிரதாயங்கள்
அவர்கள் வியாதியாய் மாறிவிட்டது.
இதயங்கள் மாறாமல்
இறைவனை வேண்டி அர்த்தமென்ன
என்னோடு முடிந்து போகட்டும்
இந்தப் பலியின் இழிவுகள்
என் இரத்தமாவது
இவர்களின் மனதைச்
சுத்தமாக்கட்டும்

**பா. முரளிதரன்**
4ஆம் கட்டை,
பள்ளிக்குடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரி ..... குறு நகர் வலம்

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள பூநகரிப் பிரதேசம் மிகவும் தொன்மையான வரலாறுகளையும், கலை, கலாசார, பண்பாட்டுப் பின்னணிகளையும், சமய வழிபாட்டு நடைமுறைகள், சடங்குகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சமயற் பாக முறைகள் முதலியவற்றினையும் தன்னகத்தே கொண்டு விளங்குவது குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

எனினும் வளமாக இருந்த பூநகரிப் பிரதேசம் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக வளம் குன்றிய பிரதேசமாக மாறியுள்ளமை மனம் வருந்தத்தக்க விடயமாகும்.

பூநகரிப் பிரதேசத்தின் கடலன்னையும், நிலமகளும் இணைந்து வழங்கும் திரவியங்களே இப்பகுதிச் செல்வமெனில் மிகையாது. கடல்படு திரவியங்களால் அது தொடர்பான தொழில்வகைகள் பல்கிப் பெருகியிருந்தன. அதேபோல் வயல்களில் ஊர் உலகம் போற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பூநகரி அரிசி" இனங்களால் இல்லங்களில் இல்லாமை இல்லாதொழிந்திருந்தது. ஆவினங்களின் ஐஸ்வர்யங்கள் அகலக் கால் விரித்திருந்தன.

கற்பகதருவாம் பனை விருட்சத்தின் பயன்கள் வேரோடி விழுதெறிந்து கிளைபரப்பி நிற்கின்றன. வாழவழிதெரியாது நகர்ப்புறங்களில் இருந்து வன்னிக்கு வரவு கட்டியவர்களில் பெரும்பான்மையானோர் நிலைத்த இடங்களிற் பூநகரி குறிப்பிடத்தக்க பிரதேசமாகத் திகழ்ந்தது.

கிராமிய வழிபாட்டுத்தலங்கள் திரும்பும் திசையெங்கும் திகழ்ந் திருந்தன. வந்தோரை வரவேற்கும் விருந்தோம்பற் பண்பாடு பச்சைப் பசேலெனக் காட்சியளித்திருந்தது.

இத்தகைய இயற்கையுடன்கூடிய வாழ்வியற் தடங்கள் இன்று குற்றுயிராய்க் கிடந்து .மறுமலர்ச்சிக்காக மன்றாடுகின்றன.

காங்கைகூடிய அற்புதங்கள் புரிந்த வழிபாட்டுத் தலங்கள் வெளவால்களின் வாழ்விடங்களாகக் காட்சியளிக்கின்றன. பழைமையும், வரலாறுகளும் அழிந்து பட்டுப்போகாமல் காப்பதற்கும்; மறுமலர்ச்சியை நோக்கிப் பயணிப்பதற்கும்; பூநகரிப் பிரதேச கலாசாரப்பேரவை எடுத்த கலாசார விழாவில் வெளியிடப்படும் "பூந்துணர்" அரையாண்டுச் சஞ்சிகை வெளியீடானது கணிசமான பங்கினை வகிக்கும் என்பது வெளிப்படை.

"பூந்துணர்" சஞ்சிகை வெளியீடு பூநகரிப் பிரதேசத்திற்கு ஒரு தேன்போன்ற தெள்ளிய சக்தியை வழங்கும் என்பது எனது நம்பிக்கை. தேன் தானும் கெடாது, தன்னைச் சார்ந்தாரையும் கெடவிடாது. சாதிக்க நினைக்கும் பூநகர், பூந்துணர் ஊடாகப்புகுந்து சாதிக்கலாம்.

**சுருதி**
பூநகரி - பிரதேச செயலகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

1. அச்சுலக்க சிக்கிவ்வாங்கி துவக்கும் அல்ல;; அலகாட்டி இலை ஒதுக்கும் யானையும் அல்ல, மச்சத்தின் பேருண்டு மீனுமல்ல, மனிதர் கொண்டாடுவது தெய்வமும் அல்ல; இச்சையுடன் மடியில் வைப்பர் பிள்ளையும் அல்ல; இதுகும் ஒரு பொருளாகும் உரைத்திடுவாயே ?

**சுங்கான்**

2. முப்பதின் ஐந்தின் முறைப்பது மேற்கு அப்புறம் தேய்ந்து அறம்புறமாகிப்படுவது கிழக்கே சத்தியமாகச் சந்திரன் அல்ல– சூரியனும் அல்ல. அது என்ன ?

**நிழல்**

3. பச்சை பச்சையென்று இருக்கும், பக்கமெல்லாம் முள்ளிருக்கும், பலாக்காயும் அல்ல, உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயும் அல்ல, உருக்கினால் நெய் வடியும் திருக்கையும் அல்ல; இதுகும் ஒரு மரத்தின் காய். அது என்ன ?

**முத்து ஆமணக்கு**

4. அறுத்த கத்தியில் இரத்தம் இல்லை, ஆக்கின சட்டியில் இரத்தம் இருக்கு அது என்ன ?

**பாக்குவெட்டி – வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்குச் சப்பியவாய்**

5. ஒரு பிடி ஓலை திருமுடி ராசா, காசிக்குப் போனாலும் வாசிக்க மாட்டார்; அது என்ன ?

தலைமுடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சின்னச் சிறுக்கனும் சின்னச் சிறுக்கியும் சேர்ந்து மாய்ந்து கோர்த்த மாலை சிக்கில்லாமல் அவிட்டவர்க்கு செந்தணப்பு மாலை. அது என்ன ?

**இடியப்பம்**

7. ஆழக்கிடங்கு வெட்டி, அதில ஒரு முட்டையிட்டு, அண்ணாந்து பார்த்தா 90 முட்டை. அது என்ன ?

**தென்னைமரம்**

8. மூக்கனாம் பிட்டியிலே 32 தென்னைமரம். காயாது பூவாது தனியப் பழுத்து தனியாகிவிழும் அது என்ன ?

**பல்**

9. ஆயிரம் தச்சர்கூடி அழகான மண்டபம் கட்டி ஒருவன் கண்பட்டாப்போல் அழிந்துபோகும், அது என்ன ?

**தேன்கூடு**

10. மன்னாருக்குப் போனேன் சட்டையிட்ட மாது சரிந்திருந்தாள்; பரிசு என்னென்றேன் ? பதினெட்டு என்றாள். மேலே பிடித்து இழுத்துவிட்டேன். காலை உதறிவிட்டு மேலே எழுந்து நின்றாள். அது என்ன ?

**குடை**

**இராமலிங்கம் பொன்னையா**


(வயது 76)

பிள்ளையார்நகர்,

4ஆம் ஒழுங்கை, பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரி; செட்டிய குறிச்சியும், திகிரி விநாயகரும் - வரலாறு

பூநகரிக் கிராமமானது ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட ஆதி கிராமங்களில் ஒன்றாகும். பூநகரிப் பகுதியானது தற்பொழுது கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு பகுதியாகும். தனியான பிரதேச செயலர் பிரிவையும் கூடிய குடிப்பரம்பலைக் கொண்ட பிரிவாகவும் உள்ளது. அப்பிரதேச செயலர் பிரிவில் பல கிராமங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஒன்றுதான் செட்டிய குறிச்சிக் கிராமம். நம் மூதாதையர்களால் ஆதிகாலத்தில் கிராமங்களின் பெயர்கள் உருவாக்கப்பட்டபோது அக் கிராமத்தில் வாழும் மக்களின் தொழில் சார்ந்த மரபுகள் என்பவற்றை வைத்து உருவாக்கப்பட்டதாக வரலாற்றுச் சான்றுகள்மூலம் அறிய முடிகின்றது. அக்காலத்தில்தான் மரபு (சாதி) ரீதியாகவும் ஒவ்வொரு தொழிலைச் செய்பவர்களுக்குத் தொழில் ரீதியாகவும் வகுக்கப்பட்டும் அவ்வாறான மக்கள் வாழ்வதற்கு ஒருசில கிராமங்களை வகுத்தும் குடியேற்றியமையும் வரலாற்று ரீதியாக அறிய முடிகின்றது. அதற்கு உதாரணமாக செட்டியார்குறிச்சி, மறவர் குறிச்சி, கரையார் குறிச்சி, கொல்லர் குறிச்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவர் குறிச்சி, ஞானிமடம், சித்தர் குறிச்சி என்னும் பெயர்கள் உள்ளது. அப்பெயருக்கு ஏற்ற மக்கள் அக்கிராமத்தில் பெரும்பான்மையாக வசித்துள்ளனர். காலக்கிரமத்தில் இப்பெயர்கள் மருவிச் செட்டிய குறிச்சி, மறவர் குறிச்சி, கரையா குறிச்சி (தற்காலம் மட்டுவில் நாடு), கொல்லர் குறிச்சி, தீவகக் குறிச்சி (மட்டுவில் நாடு கிழக்கு), ஞானிமடம், சித்தன்குறிச்சி என அழைக்கப்பட்டு வருகின்றது. இக்கிராமங்களில் காலப்போக்கில் மரபு ரீதியான மக்களுடன் ஏனைய மக்களும் இப்போது வசித்து வருகின்றனர். குறித்த செட்டிக் குறிச்சி கிராம வரலாற்றில் ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் செட்டி வம்சத்தினர் அதிகமாக வசித்துள்ளனர். இன்றும் செடித்தெரு என்னும் பெயர் நடைமுறையில் உள்ளது. அங்கு வாழ்ந்த செட்டியார் வம்சத்தினர் யாழ்ப்பாணத்தில் கொழும்புத்துறை கிராமத்திலும் பரவலாக வசித்து வந்தனர். அக்காலத்தில் கொழும்புத்துறை ஊடாக பூநகரி நாகதேவன்துறைக்கு மக்கள் தோணிகளில் வந்தே வன்னி உட்பட்ட ஏனைய பிரதேசங்களிற்குப் பிரயாணங்களை மேற்கொண் டுள்ளனர். இப்பாதைப் போக்குவரத்து அன்னியர் ஆட்சிக் காலத்தில் இருந்தே நடைமுறையில் இருந்து வந்தது. இதனடிப்படையில் குறித்த செட்டியவம்சத்தினர் வணிகத் தொழிலில் ஈடுபட்ட காரணத்தால் வியாபார நோக்கத்திற்காக இப்பிரதேசங்களுக்கு வந்து இராமலிங்கச் செட்டியார், சின்னையா செட்டியார், கட்டைச் செட்டியார் போன்ற பிரபல்யமான செட்டியார் வம்சத்தினர் இக்கிராமத்தில் குடியேறி னார்கள். அதன் பிரகாரம் செட்டியார் குறிச்சி என அக்கிராமம் அழைக்கப்பட்டு காலக்கிரமத்தில் செட்டியகுறிச்சி என மருவி உள்ளது. இவர்களைத் தொடர்ந்து பகுதியாக ஏனைய மக்களும் அதாவது, யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக்கொண்ட மக்களும் குடியேறிக் காணி பூமிகளைத் தமதாக்கி விவசாயத்தில் ஈடுபட்டும் ஒரு சிறிய பகுதியினர் மரபு ரீதியான தொழிலிலும் ஈடுபட்டார்கள். இதனடிப்படையில் செட்டியகுறிச்சி கிராமம் பூநகரிப் பகுதியில் ஆகக்கூடிய குடிப்பரம்பலைக் கொண்ட கிராமமாகத் திகழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பிரகாரம் முதன் முதலாகச் செட்டியகுறிச்சிக் கிராமத்தில் வாழும் பிள்ளைகளின் கல்வி நலன் கருதி செட்டிய குறிச்சியைச் சேர்ந்த சரவணமுத்து என்பவரால் திண்ணைப் பள்ளிக்கூடமாகத் தனது காணியில் பாடசாலை ஒன்றை அமைத்துக் கல்விச் செயற்பாட்டைத் தொடங்கினார். அக்கல்விச் செயற்பாடு அபிவிருத்தி அடைந்து அரசாங்கத்தால் குறுகிய காலத்தில் பொறுப்பேற்கப்பட்டு ஒரே ஒரு உயர்கல்விப் பாடசாலையாகச் செட்டியகுறிச்சி அ.த.க. பாடசாலை எனும் பெயரில் செயற்பட்டது. இப்பாடசாலையில் S.S.C. வகுப்புவரை (இது தற்போதைய க.பொ.த. உயர்தரத்திற்குச் சமமானது) கல்வி நடவடிக்கை இடம்பெற்றது. பொன்னம்பல வாத்தியார் என்பவர் இப் பாடசாலையில் முதலாவது அதிபராகக் கடமையாற்றினார். அப்பாடசாலையில் கல்வி பயின்ற பலர் தலை சிறந்த கல்வி மான்களாக உள்ளனர்.

1890 – 1900 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில்தான் குறிப்பிட்ட திகிரி விநாயகர் ஆலயம் உருவாகியதாக நம் முன்னோர்கள் மூலம் அறியக் கூடியதாக இருந்தது. இதற்கு சான்றாக ஆலயக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுச் செயற்பட்டதற்குச் சான்றாக 1897ஆம் ஆண்டு மூலஸ்தான கட்டிடம் உருவானதற்கு எழுத்துமூல தடங்கள் உள்ளன. இவ்வாலயத்தின் வரலாறானது பல புதுமை வாய்ந்ததும் அதி சிறப்பு வாய்ந்ததாகவும் உள்ளது. வரலாற்று ரீதியாக ஆராயுமிடத்து சுமார் 100 ஆண்டுகளுக்குமுன் தற்பொழுது ஆலயம் இருக்கும் பகுதி திகிரி எனும் காட்டு மரங்களை உள்ளடக்கிய பிரதேசமாக இருந்துள்ளது. அக்காலத்தில் ஒரு சன்னியாசி அப்பகுதிக்கு வந்து ஒரு திகிரி மரநிழலில் தங்கி இருந்து இறைவணக்கத்தில் ஈடுபட்டார் என்றும்; அவ்வேளை அவர் தனது தியானத்தின் நிமித்தம் சிவன், அம்மன், பிள்ளையார் விக்கிரகங்களை அம்மரத்தின் கீழ் வைத்து வணங்கி தன்னால் சமைக்கப்பட்ட சாதத்தைக் குறித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரகங்களுக்குப் படைத்து பிள்ளையாரை வணங்கிவிட்டுத் தனது பிரயாணத்தைத் தொடரும் நோக்கில் குறித்த விக்கிரகங்களை எடுக்க முற்பட்டபோது விநாயகர் விக்கிரகம் அந்த இடத்தை விட்டு நகர்த்த முடியாமல் இருந்தது. அன்றிரவு குறித்த சந்நியாசிக்குக் கனவில் தோன்றி தான் அதே இடத்தில் நிலை கொண்டு அப்பகுதி மக்களுக்கு அருள்பாலிக்கப்போவதாகத் தெரியப்படுத்தியதற்கு அமைய குறித்த சந்நியாசி அப்பிள்ளையார் விக்கிரகத்தை விட்டுவிட்டுச் சென்றதாகவும் இவ்விடயத்தைக் கேள்வியுற்ற அக்கிராம மக்கள் திகிரி மரத்திற்குக் கீழ் இருந்த பிள்ளையாரை பூசிக்கத் தொடங்கினர்.

இதற்கு மேலாக அந்த விநாயகப் பெருமான் அப்பகுதியில் நிலைகொண்டு பல அற்புதங்களை நிகழ்த்தியதாக புராணங்கள் ரீதியாக அறிய முடிகின்றது. ஒரு தடவை கச்சாய்க் கிராமத்தில் இருந்து கடற்பாதையூடாக கடாமாட்டில் தேங்காய் ஏற்றி வன்னியூடாகப் பிரயாணம் செய்யும் வியாபாரிகள் குறித்த விநாயகர் பெருமான் நிலைகொண்டுள்ள இடத்தில் தங்கி அதற்கு அருகாமையில் உள்ள குளத்தில் நீராடிச் செல்லுவது வழக்கம். அவ்வாறு குறித்த வியாபாரிகள் 3000 தேங்காயுடன் வந்து சுமையை இறக்கிவிட்டு கடாக்களைக் கட்டிவிட்டு உறங்கினார்கள். அதிகாலை பார்த்தபோது கடா மாடுகளைக் காணவில்லை. பல இடங்களில் தேடியும் 2 நாட்களாகக் காணாத நிலையில் வியாபாரிகள் விநாயகப் பெருமானை வணங்கி 3000 தேங்காய்களையும் உடைப்போம் கடா மாடுகள் மீண்டும் கிடைக்க வேண்டும் என வேண்டுதல் செய்து விட்டு திரும்பிப் பார்த்தபோது அருகில் உள்ள நீர்ச்சுனையில் கடாமாடுகள் நின்றதாகவும்; அவ்வேளை வன்னியில் உள்ள வியாபாரி ஒருவர் தனக்கு உடைத்த தேங்காய்கள் தேவையெனக் கூறி வேண்டிச் சென்றதாகவும் அறிய முடிகிறது. குறித்த நீர்ச்சுனை தற்பொழுதும் ஆலயத்துக்கு அருகில் "தில்லையற்ற குண்டு" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுகின்றது. இவ் அதிசயங் களைக் கேள்விப்பட்ட மக்கள் விநாயகருக்கு சிறு குடிசை அமைத்து வணங்கி வந்ததுடன் ஒரு பூசகரை நியமித்து வந்தார்கள். அந்தப் பூசகர் ஐயா திருட்டுத்தனமாகப் பிள்ளையாரை எடுத்துச் சென்று விற்பனை செய்யும் நோக்கில் குறித்த பூசகரான கிட்டுசாமி என்ற ஐயர் விநாயகரை பட்டுத்துணியால் சுற்றிக் கையில் எடுத்து சென்றார். சிறுதூரம் சென்றதும் – பிள்ளையாரின் எடை கூடிக்கொண்டு வரும் நிலையில் தோளிலும் பின்பு தலையிலும் வைத்து சுமந்துசென்றபோது பாரம் தாங்காமல் வழியில் உள்ள ஒரு வைரவர் கோவிலில் இறக்கி வைத்துவிட்டார். இந்த நிகழ்வு கோயிலின் பஞ்சாயத்துத் தலைவருக்கு கனவில் தோன்றி விநாயகர் இருக்கும் இடத்தைத் தெரியபடுத்தியற்கமைய அடுத்த நாள் காலை உரிய இடத்துக்குச் சென்று பார்த்தபோது அதே நிலையில் பட்டுத்துணியால் சுற்றியபடி இருந்ததாகவும் அதனை மீண்டும் எடுத்துவந்து உரிய இடத்தில் வைத்து வணங்கியதாகவும் வரலாறுகள் மூலம் தெரிய வருகின்றது.

மேலும் விநாயகரது அதிசயமாகப் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் அவர்களின் பிரதிநிதிகள் செட்டிய குறிச்சிக் கிராமத்தில் குளம் கட்டுவதற்கு வந்து ஆலய வாசலில் அப்பகுதி மக்களை அழைத்து ஆலயத்திற்கு அண்மையிற் குளம் கட்டுவதற்கு ஆராய்ந்தபோது பஞ்சாயத்தார் எங்களுக்குக் குளம் மூலம் நீர் தேக்கத் தேவையில்லை திகிரிக்குளம் என்று ஒன்று உண்டு. இது நாங்கள் நினைத்தவுடன் நீர் நிரம்பி வழியும் எனக் கூறியபோது அதனை நிரூபிக்குமாறு வெள்ளையர்கள் கேட்டுள்ளார்கள். அதற்கமைய திகதி குறிப்பிடப்பட்டு அந்நாளில் நிரூபித்துக் காட்டுவதாக சவால் விட்டு பஞ்சாயத்தார் குறித்த தினத்தில் பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு முன்னிலையில் மூன்றுபேர் தோய்ந்து ஸ்நானம் செய்து விநாயகப் பெருமானைச் சுற்றி வந்து தேங்காய் உடைத்தபோது பெரு வெள்ளமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை பெய்யத் தொடங்கியது. வந்த பிரித்தானிய ஆட்சியாளர்கள் திரும்பிச் செல்ல முடியாத அளவிற்கு நீர் நிரம்பிப் பாய்ந்துகொண்டு இருந்த நிலையில் அவர்கள் பஞ்சாயத்தார்களிடம் மன்னிப்புக் கோரி மழையை நிறுத்துமாறு வேண்டினார்கள். மீளவும் பஞ்சாயத்தார் தேங்காய் உடைத்தபோது மழை நின்றதாகவும் பிரித்தானியர் இவ்விடயத்தைக் கண்டு ஆலயத்திற்கு உதவிகள் செய்துவிட்டுச் சென்றதாகவும் தெரிய வருகிறது.

அதன்பின்பு குறித்த ஆலயம் மக்களால் சிறிய அளவில் ஸ்தாபிக்கப்பட்டு நிர்வாக சபையால் பரிபாலிக்கப்பட்டு வரும்வேளை நிர்வாகசபை உறுப்பினர்களிற்கு இடையில் ஏற்பட்ட மனக்கசப்புக் காரணமாக நிர்வாக சபையின் ஒருபகுதியினர் இரவோடு இரவாக விநாயகப் பெருமானை எடுத்துச்சென்று அடுத்த கிராமத்தில் உள்ள சோபாலபிட்டி பிள்ளையார் கோவிலின் வில்வ மரத்தின்கீழ் புதைத்துவிட்டார்கள். தொடர்ந்து விநாயகரைக் காணாது அப் பகுதி மக்கள் புதிதாக விக்கிரகம் வாங்கிவந்து மூல மூர்த்தியாக வைத்துப் பூசித்தார்கள். சிறிது காலத்தில் பூசகரின் தற்செயலான செயலாக தண்ணீர்க்குடம் ஒருகையில் பட்டு விட்டதால் பிள்ளையாரின் ஒருகை உடைந்துவிட்டது. இதனால் அப்பகுதி மக்கள் மிகவும் துயரப்பட்டு ஏற்கனவே கோவிலில் இருந்த பிள்ளையார்தான் திருப்பவும் தேடி எடுத்துக் கொண்டு வர வேண்டும் என மனமுருகிப் பிள்ளையார் மீது ஆணையிட்டு ஆலயத்தை 2, 3 மாதம் பூசையில்லாமல் பூட்டிவிட்டார்கள். குறித்த பிள்ளையார் கடத்தியவரில் ஒருவரான பொன்னுச்சாமிக் குருக்கள் என்பவர் நிர்வாகத்திடம் மன்னிப்புக்கோரி விநாயகரைக் கடத்திய தன்னுடன் சேர்ந்தவர்கள் இறந்துவிட்டார்கள் தனக்குப் பயமாக உள்ளது. விநாயகர் இருக்கும் இடத்தைக் காட்டுகின்றேன் எனக் கூறி நிர்வாக சபையைக் கூட்டிச் சென்று புதைத்த இடத்தைக் காட்டினார். உடன் அப்பிள்ளை யாரைக் கொண்டுவந்து பூசைகள் செய்வதாகவும் ஆலயத்தில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைக்கை உடைந்த பிள்ளையாரை அக்காலத்தில் காணி உத்தியோகத்தராக இருந்த திருஞானசம்பந்தர் என்பவர் எடுத்துச் சென்று உருத்திரபுரம் குடியேற்றத்திட்டத்தில் வைத்து மாணிக்கப் பிள்ளையார் எனப் பெயர்சூட்டி வணங்கியதாகவும் வரலாறுகள்மூலம் தெரிய வருகின்றது.

இவ்வாறாகப் பல அதிசயங்களைப் புரிந்த விநாயகர் திகிரி விநாயகர் என அழைக்கப்பட்டு வருகின்றது. பூநகரிப் பிரதேச செயலக பிரிவிலேயே தேரோடும் கோயிலாக அதாவது வருடாந்தம் சித்திரை மாதம் அமாவாசை திதி வந்து ஆறாம்நாள் கொடியேற்ற நிகழ்வு நடைபெற்று 10 நாட்கள் உற்சவம் நடைபெற்றுத் தேர்த்திருவிழா நடைபெறும். ஒரே ஒரு ஆலயம் திகிரி விநாயகர் ஆலயம் ஆகும். இவ் ஆலயத்தில மகோற்சவ நிகழ்வு சித்திரை மாதத்திலும் பின்பு ஆவணிச் சதுர்த்தி நவராத்திரி பூசை, கந்தசஷ்டி, சூரன்போர் நிகழ்வு, கௌரிக்காப்பு, பெருங்கதை, திருவெம்பாவை எனப் பல நிகழ்வுகளும் முறைப்படி சிவாச்சாரி அவர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆலயமும் இதுவாகும். இவ் ஆலயத்தின் கொடியேற்ற நிகழ்வும் சிறப்பு மிக்க புராண வரலாறும் ஒன்றைக் கொண்டதாக உள்ளது.

கொடியேற்ற நிகழ்வுகளின்போது கொடிச்சீலை வழங்கும் நிகழ்வு செட்டிய குறிச்சி கிராமத்தில் ஆரம்பகாலம் முதல் வசித்துவரும் மக்களின் ஒரு பகுதியினரான செங்குந்தர் என்றும் அழைக்கப்படும் சமூகத்தினரால் கொடுக்கப்பட்டு வருகின்றது. இதேபோன்ற நிகழ்வு யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயில், சட்டநாதர் சிவன்கோயில், வல்லிபுர ஆழ்வார்கோயில், பருத்தித்துறை சிவன்கோயில், கரவெட்டி யாக்கரு விநாயகர் கோவில், ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோவில், முள்ளியவளை காட்டா விநாயகர் கோயில் போன்றவற்றிலும் இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஏன் இவ்வாறு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியினரால் கொடிச்சீலை வழங்கப்படுகின்றது. என்பதற்கும் கீழ்வருமாறு புராணக் கதைகள் உள்ளன.

சிதம்பரத்துக்கு உமாபதி சிவாச்சாரியார் என்னும் அந்தணர் பூசை செய்து வந்தார். இவர் பூசைக்குச் செல்வதும், பூசை முடிந்து திரும்பி வரும்போதும் சிவிகையில் பிரயாணம் செய்வார். சிவிகை என்பது பட்ட மரத்தினால் செய்யப்பட்ட ஆசனத்தில் வீற்றிருக்க நாலுபேர் அவரைக் காவி வருவதும் அவருக்கு முன்பாக தீவட்டி ஏற்றி வருவதும் ஆகும். இவ்வாறு ஒருநாள் உமாபதி சிவாச்சாரியார் சிவிகையில் வரும் போது மறைஞான சம்பந்தர் என புராணத்திலே அழைக்கப்படும் அடிகளார் இவரது வருகையைக் கண்டு "பட்ட கட்டையில் பகல் குருடு போகிறார் கண்டீர் " எனக் கூறினார். இதன் கருத்து பட்ட கட்டை என்பது காய்ந்த மரத்தில் செய்யப்பட்ட ஆசனம். பகல் குருடு என்பது பகல் நேரத்தில் தீவட்டி வெளிச்சம் ஏற்றிச் செல்வதாகும். இக்கருத்தை உணர்ந்த உமாபதி சிவாச்சாரியார் தன் தவறை உணர்ந்து சிவிகையில் இருந்து இறங்கி மறைஞான சம்பந்தர் சென்ற பாதையிலே அவரைத் தேடிச்சென்றார். நெசவுத் தொழிலில் ஈடுபடும் செங்குந்த மக்கள் வாழும் கிராமத்தில் மறைஞானசம்பந்தர் சென்று அவர்களால் காச்சப்பட்ட கூழ் வேண்டி பருகிக்கொண்டு இருந்தார். உமாபதி சிவாச்சாரியார் இவரது காலில் விழுந்து வணங்கி தனக்கு ஞான உபதேசம் செய்யுமாறு வேண்டியதுடன் செங்குந்த மக்களால் கொடுக்கப்பட்ட கூழையும் மறைஞான சம்பந்தரிடம் வேண்டிப் பருகினார். இச் செய்தியைக் கேள்வியுற்ற சிதம்பரத்து அந்தணர்கள் உமாபதி சிவாச்சாரியார் இவ்வாறு நடந்து கொண்டமையால் பூசை செய்வதற்குத் தகுதி அற்றவர் எனக் கருதி சிதம்பரத்து பூசையில் இருந்து நீக்கிவிட்டார்கள். அவ்வருடம் சிதம்பரத்தில் கொடியேற்ற நிகழ்வு நடைபெற்றபோது அக் கொடிச்சீலை ஒரு குறிப்பிட்ட உயரத்துக்கு அப்பால் ஏற்ற முடியாது தடைப்பட்டு இருந்தது. எவ்வாறு முயற்சி எடுத்தும் கொடியேற்ற முடியாத நிலையில் அந்தணர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கிய வேளை வானத்தில் இருந்து "அசிரீரி" கேட்டதாம். கொடியேற்றலுக்கு தகுதி உடையான் உமாபதி சிவாச்சாரியர் தான் இவர் எந்த மக்களிடம் கையேந்தி கூழ் குடித்தாரோ அதே மக்கள் தரும் கொடிச்சீலையே எனக்கு உகந்தது என்று கூறப்பட்டது. உடன் அந்தணர்கள் உமாபதி சிவாச்சாரி யாரை வணங்கி மன்னிப்புக்கோரி செங்குந்த மக்களால் தயாரிக்கப்பட்ட அல்லது அவர்களது கைபட்ட துணியையும் அவர்கள் மூலமாகக் கொண்டுவந்து ஏற்றியபோது கொடி தானாகவே ஏறியதாகவும், அன்றில் இருந்து சிதம்பரம் உட்பட செங்குந்த மக்கள் வாழும் பிரதேசங்களில் இதே புராதன நிகழ்வாகச் செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாலயம் 1964ஆம் ஆண்டு சூறாவளியினால் சேதமடைந்த மண்டபங்கள் விழுந்த நிலையிலும் பின்பு அடியார்களின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டது. குறித்த மூலஸ்தானத்தில் இருக்கும் தான்தோன்றிப் பிள்ளையாரின் உருவம் மிகச் சிறியதாக உள்ளது. அதனை மாற்றி அமைப்பதற்கு முயன்றும் அருள் கிடைக்காத காரணத்தினால் 1982ஆம் ஆண்டு மூல மூர்த்தியின் ஆசனக் கல் மாற்றப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

பின்பு 1991 வலம்புரி

இராணுவ நடவடிக்கையின் போது மக்கள் இடம்பெயர்ந்தார்கள். அக் காலப்பகுதியில் பரிபாலன சபைத் தலைவராக இருந்த ஆறுமுகம் கதிரவேலு, செயலாளர் அம்பலவாணர், பொருளாளர் க.து. கந்தசாமி போன்றவர்கள் முயற்சியாலும் குறித்த ஆறுமுகம் கதிரவேலு காலமாக நிர்வாகம் மாற்றியமைக்கப்பட்டு புதிய நிர்வாகமாக கதிரவேலு ஸ்ரீபாலன் தலைவராகவும், தா . அரியரத்தியம் செயலாளராகவும் கொண்ட பரிபாலனசபையின் முயற்சியால் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப் பட்டு அடியார்கள், நலன்விரும்பிகளின் பங்களிப்புடன் புனரமைப்பு வேலை முடிந்து 2003. 08.23 குடமுழுக்கு நிகழ்வு சிறப்பாக நடை பெற்றது. தொடர்ந்து இயங்கிய வேலை 11.08.2006 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் இடப்பெயர்வு ஏற்பட்டு மக்கள் இடம்பெயர்ந்து மீள 10.01.2010 இல் வந்தபோது ஆலயமும் விக்கிரகமும் மட்டுமே உள்ளது. கட்டடங்கள் சேதமடைந்தும் ஏனைய பொருட்கள் யாவும் அழிந்து சேதமடைந்த நிலையிலும் தற்போது பகுதி பகுதியாக மீள் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. இக்கிராம மக்களும் இடம்பெயர்ந்து தற்போது பகுதி பகுதியாகக் குடியேறிக்கொண்டு இருக்கிறார்கள். தற்போது இந்து கலாசார அமைச்சினால் வழங்கப்பட்ட ஒரு பகுதி உதவியைக் கொண்டு புனரமைப்பு வேலைகள் செய்யப்படுகின்ற வேளையில் குறித்த இந்து கலாசார திணைக்களத்துக்கும் அதனைச் சார்ந்த உத்தியோகத்தர் களுக்கும் உதவி அரசாங்க அதிபர், அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.


**ஆலய பரிபாலன சபையினர்**
**கிராம அலுவலர் பிரிவு - KN/62**
**செட்டிய குறிச்சி.**



**கௌதாரிமுனையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்து ஆலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொத்தாகும் முதுமை

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" எனும் ஔவைப் பிராட்டியின் வாக்கிற்கேற்ப மனிதப் பிறவியை எடுத்த ஒவ்வொரு வருக்கும் பிணி, மூப்பு, சாக்காடு என்பன இயல்பாகவே அமைந்து விடுகின்றது. இந்நிலையில் எம்மைப் பெற்று வளர்த்துப் பேணிப் பாதுகாத்து இவ்வுலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த எம் பெரியோர்கள் மிகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள். இவர்களது சேவைகள், வாழ்க்கை முறைகள், கலாச்சார விழுமியங்கள், பழக்க வழக்கங்கள் போற்றுதற் குரியவவையாக விளங்குகின்றன. இவர்கள் எம் சமூகத்திற்குச் செய்த சேவையை, நன்மையை மறப்பது தீமையே தரும் என்பதை

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்று திருவள்ளுவர் கூறுவதனூடாக விளக்கலாம்.

நவீன தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்ற இக்காலத்தில் அன்புச் செல்வங்களை வளர்த்து ஆளாக்கி முன்நகர்த்தி வைத்த முதியோர்கள் மன நிம்மதியோடு வாழ வைக்க எந்தத்தொழில்நுட்பமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி செய்யவில்லை என்பது உண்மையே "முதுமை எய்தல் என்பது இயற்கையானது தவிர்க்க முடியாதது. இது மாற்றம் பெறுவதில்லை. முதியவர்களை எமது சமூகம் மதித்து பெரும் சொத்தாகப் பேணி பாதுகாக்க வேண்டும். இதனையே வள்ளுவரும்

"அரியவற்றுள்தான் எல்லாம் அரிதே பெரியோரைப்
பேணி தமராகக் கொள்ளல்" என்றார்.

எம்மைப் பெற்று வளர்த்து, பேணிப்பாதுகாத்த முதியோர்களுக்கு நாம் செய்யும் சேவையானது கடவுளுக்குச் செய்யும் சேவையேயாகும். கோழி குஞ்சை அடைகாப்பதுபோல முதியோர்கள் குழந்தைகளை, சிறுவர்களை, இளம் பராயத்தினரை, வயதுவந்தவர்களை என ஒவ்வொரு படிநிலையிலும் பாதுகாத்து வந்துள்ளனர். அவர்களை நாம் பெரும் சொத்தாக மதித்து பெருந்தொண்டாற்ற வேண்டும். இவர்களிடத்தில் அன்பு, மரியாதை, உதவி செய்தல் வேண்டும்.

பெரும் சொத்தாகிய முதியோர்களை வாழ்வளித்து சிறப்பித்து மரியாதையுடன் அவர்களுக்குரிய அந்தஸ்துடன் அவர்களின் குறைகளை யெல்லாம் போக்கிப் பாதுகாத்தல் அவசியமாகும்.

"மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்பதற்கிணங்க முதியவர்கள் அனுபவம், அறிவு, ஆற்றல் உள்ளவர்கள். மூத்தோர்கள் கூட்டுக்குடும்பமாக ஒற்றுமையுடன் வாழ்ந்து ஆழ்ந்துள்ளனர். இவர்கள் கலை, கலாச்சாரம், விரத அனுட்டானங்கள், பண்பாடு விழுமியங்கள், போன்றவற்றிற்கு முதன்மை கொடுத்து அதனுடன் ஒன்றிணைந்து வந்துள்ளார். இவர்களது அறிவு, கருத்துக்கள், அனுபவங்கள் இன்றைய இளம் சமுதாயத்திற்கு மிகவும் அவசியமாகும். சுகமாகச் செயலாற்றும் முதியவர்கள் உள்ள சமூகம் ஆரோக்கியமானதாகும். இங்கு முதுமையின் சிறப்பை, புதுமையை உணர்ந்தே உலகம் ஒக்டோபர் 1 ஆம் திகதி சர்வதேச முதியோர் தினமாகக் கொண்டாடி வருகின்றது. முதுமையில் அனுபவம், அறிவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவம், பொறுமை ஆசீர்வாதம், நல்ல சிந்தனை, தூரநோக்கு ஆகிய பயன்கள் எமது சமூகத்திற்குக்கிடைக்கின்றது.

இன்றைய சமூகங்களில் "காவோலை விழக் குருத்தோலை சிரிக்கும்" என்ற முதுமொழியைப் பலர் எண்ணிக்கொண்டு முதியோரைக் கேலிக்குரிய பொருளாக்கிப் பார்ப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். சிலர் முதியவர்களை பாரமானவர்கள் என்று எண்ணு கிறார்கள். இது பெருந்தவறாகும். பெரும் சொத்தாகிய முதியோரை வாழ்வளித்து, சிறப்பித்து அன்பு செலுத்தி அரவணைத்து மரியாதையுடன் அவர்களுக்குரிய அந்தஸ்துக்களை வழங்கி அவர்களின் குறைகளையெல்லாம் போக்கிப் பாதுகாக்க வேண்டும். அன்பிற்கும் தயவிற்கும் ஏங்கும் முதியவர்களுக்கு அவர்களிடம் அன்பாகப் பேசி கலந்துரையாடுவதன் மூலம் அவர்களது நோய், உடல் நிலைமை போன்றவற்றில் ஆரோக்கியம் ஏற்படுவதற்கு உதவியாக அமையும்.

முதியவர்களுக்கு அன்பும், அரவணைப்பும் மிகவும் அவசிய மாகும் என்பதை உணர்ந்தே அரசாங்கமும், நலன்விரும்பிகளும் முதியோர் இல்லங்களை நாடளாவிய ரீதியில் அமைத்துச் சிறப்பாக செயற்படுத்தி வருகின்றமை வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இந்த வகையில் சமூக சேவைத்திணைக்களம் அரச முதியோர் இல்லங்களைப் பொறுப்பேற்று மேற்பார்வை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணம் கைதடியில் இலங்கையின் பிரதமராக இருந்த சேர் ஜோன் கொத்தலாவலை அவர்களால் 1954 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட "அரச முதியோர் இல்லம்" மிகவும் சிறப்பாக இன்று வரை இயங்கி வருகின்றமை சிறப்பம்சமாகும். இவ் இல்லம் இன்றைய நிலையில் உணவு, உடை, உறையுள், வழங்கி பாதுகாத்து வருகின்றமை சிறப்பம்சமாகும். மேலும் முதியவர்களுக்கு புனர்வாழ்வுத் திட்டங்கள், முதியோர் மாதாந்த ஒன்றுகூடல்கள், ஆன்மீக நிகழ்ச்சிகள், மருத்துவ வசதிகள், பொழுதுபோக்கு விடயங்கள் (பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, விளையாட்டுக்கள்) பூந்தோட்டம் அமைத்தல், கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிகள், சிரமதானம், பஜனை, தியானம், யோகாசனம் போன்ற பல்வேறு செயற்பாட்டின் ஊடாகவும் அவர்களுக்கு அன்பையும், அரவணைப்பையும் ஏற்படுத்தி வருகின்றமை சிறப்பம்சமாகும். இதேபோல் கிளிநொச்சி மாவட்டத்திலும் யோகர் சுவாமிகள் முதியோர் இல்லம், மகாதேவா ஆச்சிரமம் போன்றவையும் சிறப்பாக இயங்கி வந்தன. இவை இரண்டு முதியோர் இல்லங்களும் கடந்தகால யுத்தத்தினால் செயலிழந்துள்ளன. இவை மீண்டும் சிறப்பாக இயங்கி ஆதரவற்றவர்களை அரவணைக்க வேண்டியது அவசியமாகும்.


இவ்வாறாக "திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை" என்பதற்கு இணங்க இன்று அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், சமய நிறுவனங்கள், (கொடையாளர்கள், நலன்விரும்பிகள்) போன்றன இணைந்து பல்வேறு முதியோர் பராமரிப்பு இல்லங்களை அமைத்து சிறப்பாக இயக்கி வருகின்றமை வரப்பிரசாதமாகும். மேலும் அரசாங்கம் இன்று 100 வயதிற்கு மேற்பட்டவர்களை இனம் கண்டு அவர்ளை பிரதேச ரீதியில் கௌரவித்து வருகின்றமை போற்றுதற்குரிய விடயமாகும்.

இன்றைய நிலையில் எமது சமூகம் முதியோர்கள் செய்த நன்றியை, நன்மையை, சேவையை மறக்கின்றது. மதிக்கத் தவறுகின்றது. இது சிந்திக்கக் கூடிய விடயமாகவும், பெரும்வேதனை தரும் விடயமாகவும் உள்ளது. முதியோர்களிடத்தில் இருக்கும் அனுபவங்கள், ஆற்றல்கள், வாழ்க்கை முறைகள், கலையுணர்வுகள், கலாச்சார விழுமியங்கள், பக்குவ உணர்வுகள் சமய அனுஷ்டானங்கள் போன்ற பல்வேறு திறமைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டியது இளம் தலைமுறையின் பிரதான கடமையாகும். எனவே நாம் "நன்றி மறத்தல் நன்றன்று" என்னும் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப முதியோரை கனம் பண்ணுதல் அவசியமாகும்.

**சு. சுஜித்,**
பதில் சமூகசேவை உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஞானிமடத்தின் தோற்றம்

கி.மு. யாழ்ப்பாணத்திலிருந்து நாகதேவன், அன்ன தேவன் எனும் இரு சகோதரர்கள் வருகை தந்து நாகதேவன் துறைக்கருகாமையிலும், அன்னதேவன் நல்லூர், அன்னதேவன் வயலிலும் குடியமர்ந்து வாழ்ந்து வந்தார்கள். அக்கால கட்டத்திலே நாகதேவன் துறைமுகத்தி னூடாக கச்சாய்த் துறைமுகம், கொழும்புத்துறைமுகம் ஆகிய துறைமுகங்களுக்கு மன்னாரிலிருந்து வந்த மக்களும் பூநகரி வாழ் மக்களும் தோணி மூலம் (பாய்க்கப்பல்) போக்குவரத்து மேற்கொண்டு வந்தனர். இதன் மூலமே யாழ் நகரில் இருந்து தபால் பொதிகள்கூட மன்னார் பல்லவராயன்கட்டு போன்ற இடங்களுக்கு நடையாகவும், மாட்டு வண்டியூடாகவும் அனுப்பி வைக்கப்பட்டது. அக்காலப் பகுதியில் போக்குவரத்துப் பாதை சரியான முறையில் இல்லாமலும் காட்டுப் பிரதேசங்களாகவும் இருந்தன. பூநகரி பிரதேசத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையும் வைக்கோல், நெல் போன்றன நாகதேவன் துறைமுகத்தினூடாக (பாய்க்கப்பல்) தோணிமூலம் யாழ். நகருக்குக் கொண்டு செல்லப்பட்டது. இங்குள்ள பூவரசங் குழைகளும் மேட்டுநிலப் பயிர்ச் செய்கைக்காக யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டது. இங்கு அதிகாரிகள் வருவதாக இருந்தால் கொழும்புத்துறைமுகத்தினூடாக பாய்க் கப்பலிலே (தோணி) வருகை தருவார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து வருகின்ற மக்கள் நாகதேவன் துறைமுகத்திலிருந்து ஞானிமடத்தில் அமைக்கப்பெற்றிருந்த மடங்களான அன்னதான மடம், நாயன்மார் குருபூசை மடம் ஆகியவற்றில் தங்கிச் செல்வதுண்டு.

அக்கால கட்டத்தில் இம் மடங்களில் ஞானிகளும், துறவிகளும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இதன் காரணமாகத்தான் வேறு இடங்களிலிருந்து வந்தோரை வரவழைத்து அவர்களை உபசரிக்கும் பண்பாடு நிலவி வந்துள்ளது. இம்மடங்களுக்கு நிர்வாகக் கட்டமைப்பு ஊடாகவே மக்கள் தங்கி நின்று உரிய இடங்களுக்குச் செல்வதற்கான உபசரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இக்கால கட்டத்தில் ஞானிமடத்தில் கொட்டிலுப் பிள்ளையார் எனும் ஆலயம் கொட்டிலால் அமைக்கப்பட்டு இருந்தது. போக்குவரத்துச் செய்யும் வழிப்போக்கர்கள், அதிகாரிகள் இவ்வாலயத்துக்குச் சென்று நேர்த்திகளைச் செய்து வருவதும் வழக்கமாக வந்துள்ளது. குறிப்பாக இவ்வாலயம் உடலில் உருவாகும் "கட்டுகளுக்கு" பெயர்போன ஆலயமாகும். இவ்வாலயத்தில் நேர்த்தி செய்வதன் மூலம் கட்டுகள் இல்லாமல் மாறிப்போகும் என்பது நம்பிக்கை. இப்பகுதியிலே பாம்பணிந்தான் வைரவர் ஆலயமும் பிரசித்தி பெற்று விளங்கி வந்துள்ளது. இவ்வாலயத்தில் கி.பி. 1500 ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டளவில் ஆசாரியாக இருந்த வேலுப்பிள்ளை கந்தர் அவர்களின் காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஒரு நீதிமன்ற வழக்கு ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக்கையில் உண்மைக்குப் புறம்பாக வழக்கு நடைபெறும்போது திடீரென ஒருவர் காட்சி தந்து சாட்சிக் கூண்டில் ஏறி உண்மைவிடயங்களை விளக்கி திடீரென மறைந்துவிட்டார். இதனால் அங்கிருந்த நீதவான் மற்றும் அனைவரும் திக்குத்திசை மாறிப் பின்பு இங்கு வந்தவர் வைரவர்தான் எனத் தீர்மானித்து உண்மைக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. இவ்வாலயத்திற்கு வருடப் பொங்கல் பொங்குவதாயின் கொழும்புத்துறை முகத்தில் இருந்து பொருட்கள் இறக்கப்பட்டு வடக்கன்மாட்டு வண்டியில் தங்க வைத்து வெற்றிலைமடை செய்து மறுநாள் பொங்கல் பொங்குவது வழக்கம். இதைப் பண்டம் எடுத்து வருவது என்பார்கள்.

ஒரு தடவை யாழ்ப்பாணத்திலிருந்து தோணிமூலம் பொருட்கள் கொண்டுவரும்போது ஒருவர் மதுபோதையில் நடை தள்ளாடிய வண்ணம் தோணியில் ஏறினார். அதன் பொறுப்பான தண்டயர் ஏற வேண்டாம் என்று தடுத்தபோதும் அதனைப் பொருட்படுத்தாது அந்த மனிதர் ஏறி உட்கார்ந்தார். தோணி புறப்பட்டு அரியாலைக் கிராமத்துக்கு நேரே ஏழாற்றுப்பிரிவு, கடல் மரக்கோள் எட்டாத இடத்தில் தோணியில் ஏறியிருந்தவர் கடலில் விழுந்ததும் ஏனைய மூவரும் பயப் பீதியுடன் தோணியில் வந்து நாகதேவன்துறைமுகத்திலிறங்கி வண்டியில் பொருட்களை ஏற்றி வைரவர் கோயிலுக்குக் கொண்டு செல்லப்பட்டுப் பொங்கல்கள் நடைபெற்றது. பூசாரியாக இருந்தவர் சாமி ஆடி வந்து மக்களுக்கு மத்தியிலே ஒருவரும் பயப்படவேண்டாம். "நான் தான் கடலில் குதித்தேன்" எனக் கூறினார். அப்போதுதான் கடலில் வந்த அனைவருக்கும் பயப்பீதி நீங்கி பூசைகள் நடைபெற்றது. இவ்வாறு புதுமை மிக்க ஆலயங்கள் வரலாற்று முக்கியத்துவத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுதியில் காட்சியளித்து வருகின்றன" எனவே யாழ்ப்பாணம் பூநகரி மக்களிற்கிடையே தொடர்புகள் அக்காலம் தொட்டே இருந்து வருகின்றது. இப்பாதையூடாகவே போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் வருகை தந்தனர் என்பதை அறியக்கூடியதாக இருக்கிறது. இவ்வாறு பூநகரி – ஞானிமடம் வாழ் மக்களின் கலாச்சாரமும் பண்பாடும் சிறப்புற வளர்ந்து வருகின்றது. இப்பிரதேசம் நெற் செய்கைக்குப் பேர்போன பிரதேசமாகும். இங்கு அக்கால கட்டத்தில் நாட்டு வைத்தியமும் மேலோங்கி இருந்தது என்பதை அறியக் கூடியதாகவுள்ளது.

**இரா.செல்வராசா**
சமாதானநீதவான்
ஞானிமடம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன்
# ஒரு நிமிடம்...

மனித வாழ்வியலின் வரலாறுகள், நடைமுறைகள் காலம் எனும் வெள்ளத்திலே கலந்து மிதப்பதும், தாழ்வதும், திரிவுபடுவதும், இயல்பானது. பூநகரிப் பிரதேசத்தின் கலை, கலாசாரம், பண்பாடு, நம்பிக்கைகள், இடப்பெயர்கள், பழமொழிகள், தொல்லியல் வரலாறுகள், ஆலயங்களின் அற்புதத்தன்மைகள், சமையல் பாக முறைகள், நாட்டார் இலக்கியங்கள், வழிபாட்டு முறைகள், விளையாட்டுக்கள், வைத்தியமுறைகள், தொழில்முறைகள் முதலான பல்வேறு தகவல்களையும் ஆவணப்படுத்தி வெளிக்கொணரும் நோக்குடன் "பூந்துணர்" எனும் அரையாண்டுச் சஞ்சிகையைப் பூநகரி கலாச்சாரப்பேரவை வெளியிட்டுள்ளது.

மேலும் பூநகரி கலை ஆர்வலர்கள் தமது திறன்களை வெளிக் கொணர ஒரு களமாகவும் இச்சஞ்சிகை அமைக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சஞ்சிகை தொடர்ந்து வெளிவர மேலே குறிப்பிட்ட தகவல்கள்சார் ஆக்கங்களை உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின் றோம்.

இச்சஞ்சிகை தொடர்பான தங்கள்ஆக்கபூர்வமான கருத்துக் களையும், வேண்டுகின்றோம்.

நன்றி

**பூநகரிப் பிரதேச கலாச்சாரப் பேரவை,**
பிரதேச செயலகம்,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org